Follow us:

# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 535 சுபகிருது வருடம், வைகாசி மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(03.06.2022) ஹிஜ்ரி - 1443, ஜுல்ஹஃதா - 02, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50




## உஷ்

ஜனாதிபதி விரைவில் வெளிநாட்டு பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளாராம். அப்படி அவர் போகும்போது பதில் பொறுப்புகளை பிரதமர் ரணிலிடம் ஒப்படைப்பதற்கு ஆலோசிக்கப்படுகிறதாம். ஆனால் முக்கிய பொறுப்புகளை அமைச்சர் பீரிஸிடம் ஒப்படைக்க வற்புறுத்துகிறதாம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தரப்பு.

அது இருக்கட்டும். நேற்று நாடாளுமன்றத்தில் நடந்த ஆளுங்கட்சி எம்.பிக்கள் கூட்டத்தில் தயாசிறியும், சுரேன் ராகவனும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக தகவல். கொஞ்சம் விட்டிருந்தால் கைகலப்புவரை சென்றிருக்குமாம்.

## கமெண்ட் கந்தர்..




# உரங்களை விரைவாக வழங்குவதற்கு இந்தியப் பிரதமர் இணக்கம்: வெளிநாட்டு நிதியுதவி வேலைத்திட்டங்களை துரிதப்படுத்துக!



ஜனாதிபதி கோட்டாபய அறிவிப்பு

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சிறுபோகத்துக்கான உரங்களை விரைவில் வழங்குவதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த உரமானது இந்திய கடனுதவியில் வழங்கப்படுவதுடன், இலங்கைக்குக் கிடைத்து 20 நாட்களுக்குள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத்துறை எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் தீர்வுகள் தொடர்பில்...

02 பக்கம்



## எரிபொருள் கையிருப்பு விபரம் அறிவிப்பு

யோ.தர்மராஜ்

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாக மக்கள் மத்தியில் அச்சம் இருக்கும் நிலையில் தற்போதைய எரிபொருள் கையிருப்பு தொடர்பில் வலுசக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தகவல் வெளியிட்டுள்ளார்.

02 பக்கம்

# ஆணைக்குழு நியமனம் இழுத்தடிப்பு வேலை!

### கோட்டாவை கடுமையாக சாடும் ஆளுங்கட்சி எம்.பி. பிரமித்த பண்டார



யோ.தர்மராஜ்

நாட்டில் இடம்பெறும் செயற்பாடுகள் குறித்து விசாரணை செய்வதற்கு ஜனாதிபதியால் ஆணைக்குழுக்களை நியமிப்பது காலத்தை இழுத்தடிப்பு செய்யும் செயற்பாடு என்பதோடு, எதிர்வரும் காலத்தில் கொண்டுவரப்படும் அரசியலமைப்புத் திருத்தத்தில் ஆணைக்குழுக்களை நியமிக்கும் ஜனாதிபதியின் உரிமையை நீக்க வேண்டும் - என முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

02 பக்கம்

க.பொ.த. உயர்தரப் பரீட்சை

## நவம்பரில் நடத்தப்படலாம்

### கல்வி அமைச்சர் சுசில் அறிவிப்பு

யோ.தர்மராஜ்

நாட்டில் இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருந்த கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை ஒக்டோபர் மற்றும் நவம்பர் காலப்பகுதியில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

02 பக்கம்

## சர்வகட்சி அரசை அமையுங்கள்!

### வாசுதேவ கோரிக்கை



யோ.தர்மராஜ்

நாட்டில் தற்போதுள்ள அரசாங்கம் சர்வகட்சி அரசாங்கம் இல்லை என்பதால், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தாங்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக சுயாதீனக் குழுவாக...

02 பக்கம்

## நாட்டு நிலைமை குறித்து பீரிஸ் இராஜதந்திரிகளுக்கு விளக்கம்



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், கொழும்பை தளமாகக்கொண்ட இராஜதந்திரிகளுக்கு நேற்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து விளக்கமளித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தனது உரையின்போது, இலங்கையில் நிலவும் நிலைமை மற்றும் எரிபொருள், எரிவாயு, அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் மற்றும் ...

02 பக்கம்

## பொருளாதார நிலைமைகள் குறித்து நாடாளுமன்றத்தில் விசேட உரை

### பிரதமர் ரணில் 7ஆம் திகதி ஆற்றுவார்

யோ.தர்மராஜ்

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக எதிர்வரும் 7 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

இவ்வுரை மீது எதிர்வரும் 7 மற்றும் 8ஆம் திகதிகள் என இரு நாட்கள்....

02 பக்கம்

## சகல அரச அலுவலகங்களுக்கும் வெள்ளிக்கிழமைகளில் பூட்டு

### தொழில் ஆணையாளர் அறிவிப்பு

தொழில் திணைக்களம் உட்பட அனைத்து அரச அலுவலகங்களும் திங்கள்முதல் வியாழன்வரை மட்டுமே திறந்திருக்கும் என்றும் 2022 ஜூன் 03முதல், வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மூடப்பட்டிருக்கும் என்றும் தொழில் ஆணையர் பிரபாத் சந்திரகீர்த்தி அறிவித்துள்ளார்.

02 பக்கம்

### சிறுத்தையின் உடல் மீட்பு!



கண்டி – மஹியங்கனை வீதியின் உடுதும்பர பகுதியில் நேற்று அதிகாலை வாகனம் மோதி சிறுத்தைப்புலி ஒன்று உயிரிழந்துள்ளது. சிறுத்தைப்புலியின் உடல் விசாரணைக்காக வன அலுவலகத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது.



## பொலிஸாரை திட்டித்தீர்த்த எம்.பியின் மகனும் மருமகளும்

### தெற்கு நெடுஞ்சாலையில் சம்பவம்

தெற்கு அதிவேக வீதியில் கடமையாற்றும் போக்குவரத்து பொலிஸ் கான்ஸ்டபிளை ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் திலீப் வெத ஆராச்சியின் மகன் மற்றும் அவரது மருமகள் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வீரகெட்டிய – பெதிகம இடையேயான சந்திப்பில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலையில் அவர்கள் பயணித்த வாகனத்தின் பின்பகுதியில்...

02 பக்கம்

## சிறுநீரக வியாபாரத்தில் ஈடுபடும் மருத்துவர்கள்!

### விசாரணைகள் ஆரம்பம்

இரண்டு மருத்துவர்கள் சிறுநீரக வர்த்தகத்தில் ஈடுபட்டுவருவது தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாட்டுக்கமைய இலங்கை மருத்துவ சபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை மருத்துவ சபையின் ஒழுக்கங்கள் தொடர்பான சட்டத்திட்டங்களுக்கு அமைய இந்த மருத்துவர்களுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மருத்துவ சபையின்...

02 பக்கம்

## மருந்துகளை வழங்க முன்வந்த உலக சுகாதார ஸ்தாபனம்

இலங்கைக்கு அத்தியாவசிய மருந்துகளை பெற்றுக்கொடுக்க தலையீடுகளை மேற்கொள்ள உலக ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

இலங்கை எதிர்நோக்கும் மருந்து தட்டுப்பாடு சம்பந்தமாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் உலக சுகாதார ஸ்தாபனம் இந்த முடிவை எடுத்துள்ளது.

02 பக்கம்


அனைத்து SLT-MOBITEL Home வாடிக்கையாளர்களே, நீங்களும் இன்றே eBill சேவையில் பதிவு செய்திடுங்கள்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக, நாம் அனைத்து வாடிக்கையாளர்களினதும் அச்சு பில் பட்டியல்களை eBill ஆக மாற்றியமைக்கின்றோம்.

eBill இல் பதிவு செய்ய பிரவேசியுங்கள் www.slt.lk/ebill, MySLT app அல்லது அழையுங்கள் 1212.

மேலதிக தகவல்களுக்கு அண்மையிலுள்ள SLT-MOBITEL பிராந்திய மையத்திற்கு பிரவேசியுங்கள்.

SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு

# சிறைக்காவலர் கண்காணிப்பில் சிகிச்சை பெற்றுவரும் துமிந்த

(யோ.தர்மராஜ்)

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் குற்றவியல் விசாரணை திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவிற்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய பொது மன்னிப்பை இடைநிறுத்தி உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை கடந்த 31ஆம் திகதி பிறப்பித்திருந்தது.

துமிந்த சில்வாவை கைது செய்து மீண்டும் சிறையில் வைக்குமாறு உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த உத்தரவை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளருக்கு உத்தரவிட்ட உயர் நீதிமன்றம், அதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் உதவிகளை வழங்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தது. அத்தோடு, துமிந்த சில்வாவுக்கு வெளிநாட்டு பயணத் தடையும் விதித்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதற்கமைய, வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த துமிந்த சில்வாவை, நேற்றுமுன்தினம் மாலை சி.ஐ.டி அதிகாரிகள் கைது செய்தனர். இதனையடுத்து, நேற்றுமுன்தினம் இரவு சிறைச்சாலை அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் அவரை கொண்டுவந்தனர்.

# ஈரட்டைபெரியகுளத்தில் நீராடிய 04 மாணவர்கள் நீரில் மூழ்கியதில் இருவர் சடலமாக மீட்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா ஈரட்டைபெரியகுளத்தில் நேற்று (02) மதியம் நான்கு மாணவர்கள் நீரில் மூழ்கிய நிலையில் இருவர் சடலமாகவும் இருவர் ஆபத்தான நிலையிலும் மீட்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவை சேர்ந்த 15,16ஆகிய வயதுகளையுடைய மாணவர்களே நேற்று மாலை ஈரட்டைபெரியகுளத்திற்கு நீராடச் சென்றுள்ளனர். நான்கு மாணவர்களும் இணைந்து தமது வளர்ப்பு நாயை குளிப்பாட்டி நீராடிக் கொண்டிருந்த சமயத்தில் நீரில் மூழ்கியுள்ளனர். குறித்த நால்வரையும் மீட்கும் முயற்சியில் பிரதேசவாசிகள் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது இருவர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து அயலவர்களின் உதவியுடன் குளத்தில் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்ட சமயத்தில் மற்றைய இரு மாணவர்களும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட இரு மாணவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## ஆணைக்குழு நியமனம்...

நாட்டில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள், சொத்து மற்றும் உயிர்ச் சேதங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி நியமித்துள்ள ஆணைக்குழு குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி முதல் மே 15ஆம் திகதி வரை நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற தீவைப்பு, கொள்ளைச் சம்பவங்கள், மனித கொலை உள்ளிட்ட அனைத்து வகையான சொத்து சேதங்கள் மற்றும் உயிர்ச்சேதங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமித்துள்ள விசாரணை ஆணைக்குழு பயனற்றது. இச் செயற்பாட்டை தான் முழுமையாக எதிர்க்கின்றேன்.

1978ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தனவின் ஆட்சியில் இருந்து இவ்வாறான ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டாலும் அதனால், நாட்டுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை.

இவ்வாறான ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் பொதுவாக பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்காது, அதனை மூடிமறைப்பதற்காகவே நியமிக்கப்படுகின்றன. நாட்டு மக்களின் பிரதிநிதியாக இருக்கும் என்னால் இவ்வாறான செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் இவ்வாறான ஜனாதிபதி ஆணைக்குழுக் களுக்கு எவ்வித குறிக்கோள், மக்கள் நம்பிக்கை மற்றும் நோக்கம் என எதுவும் இல்லை. மாறாக, நாட்டின் தற்போதைய நிலைமையை மேலும் குழப்புவதாகவே அமைகின்றன.

தற்போது, நியமிக்கப்பட்டுள்ளது போன்று ஜனாதிபதியால் பெண்டோரா பேப்பர்ஸ் தொடர்பாக ஆராய்வதற்கு, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக ஆராய்வதற்கு மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் போன்றவற்றை ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் இதற்கு முன்னரும் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தபோதிலும், அவற்றினால் நாட்டுக்கு எந்தப் பயனும் இல்லை.

இவ்வாறான செயற்பாடுகள் காலத்தை வீணடிக்கும் செயற்பாடாகும்.

எதிர்வரும் காலத்தில் கொண்டுவர எதிர்பார்த்துள்ள அரசியலமைப்புத் திருத்தத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்குள்ள உரிமையை நீக்க வேண்டும் - என்றார்.



சீன அரசாங்கத்தினால் விலங்குகள் பரிமாற்ற முறையின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட வங்கப் புலிகளுக்கு பிறந்த மூன்று புலிக்குட்டிகள் மூன்று மாதங்களுக்குப் பிறகு தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. (படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்)

## சர்வகட்சி அரசை...

செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (02) நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் தலைவரின் கூட்டம் நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது. இதனையடுத்து அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் எங்களுக்கு என்ன உணவைத் தருகின்றனர், அதற்கு எவ்வளவு பணம் செலவாகின்றது, எத்தனை பேருக்கு உணவு வழங்கப்படுகின்றது என்ற முழு விபரத்தையும் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என அனைத்து உறுப்பினர்களும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, தற்போதுள்ள அரசாங்கம் சர்வகட்சி அரசாங்கம் இல்லை என்பதால், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறு நாங்கள் கோரிக்கைவிடுத்தோம். இந்த அரசாங்கத்திற்கு தொடர்ந்து செல்ல முடியும் என நாங்கள் நினைக்கவில்லை.

இந்த அரசாங்கம் நாட்டின் பிரச்சினைக்கு தீர்வை முன்வைப்பதாக தெரியவில்லை. எனவே, எதிர்வரும் 7ஆம் திகதி பிரதமர் ஆற்றும் உரையிலேயே அரசாங்கத்தின் செயற்பாடுகளை அறிந்துகொள்ள முடியும். அதேபோன்று, 7 மற்றும் 8ஆம் திகதிகளில் இடம்பெறும் விவாதத்தில் மக்களின் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினை மற்றும் அதற்கான தீர்வை பெற்றுக்கொள்வது குறித்து பேசப்படும். அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதில் எங்களுக்கு எவ்வித பிரச்சினையுமில்லை. மக்களுக்காக எந்தவொரு அரசாங்கமும் முறையான திட்டங்களை முன்னெடுத்தால் அதற்கு நாங்கள் முழு ஆதரவையும் வழங்குவோம் - என்றார்.

## மருந்துகளை வழங்க...

இதற்கு முன்னர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்தன, உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளை சந்தித்திருந்தார்.

இலங்கைக்கு 18ஆயிரம் மருந்து வகைகள் தேவைப்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த மருந்துகளை மூன்று மற்றும் ஆறு மாத காலத்திற்குள் வழங்க முடியுமா என்பதை உலக சுகாதார ஸ்தாபனம் ஆராய்ந்து வருகிறது.

இந்த மருந்துகளில் 20 வகைக்கும் மேலான மருந்துகள், அத்தியாவசியமாக தேவைப்படும் மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களை வழங்குமாறு இலங்கை பிரதிநிதிகள் உலக சுகாதார ஸ்தாபனத்திடம் கோரியுள்ளனர்.

இலங்கைக்கு தேவையான மருந்துகளை பெற்றுக்கொடுப்பதற்காக சுகாதார ஸ்தாபனம் ஏனைய உலக நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. அதேவேளை, சீனா வழங்கியுள்ள மருந்து தொகை அடுத்த மூன்று நாட்களில் கிடைக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் வைத்தியசாலைகளில் நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதன் காரணமாக நோயாளிகள் மூலம் தனியார் மருந்தகங்களில் இருந்து மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு சிகிச்சை வழங்கப்படுவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

## பொருளாதார நிலைமைகள்...

விவாதமொன்றை நடத்துவதற்கும் கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (02) நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் தலைவரின் கூட்டம் நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது. இதன்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அவசர நிலைமையால் வரவு – செலவுத்திட்டத்தை மீறிய செலவுகள் இடம்பெற்றுள்ளதோடு, இனிவரும் செலவுகளுக்கான அனுமதியை கோரியும் நாட்டின் தற்போதைய நிலைமை குறித்தும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் 7ஆம் திகதி விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

எனினும், இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து தெளிவாக முன்வைப்புகள் எதுவும் இல்லாத நிலையில், பிரதமரின் குறித்த உரையில் அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து உள்ளடக்கப்பட்டிருக்கலாம் என்பதால், பிரதமர் ஆற்றும் உரை மீது நாடாளுமன்றத்தில் இரு நாள் விவாதமொன்றை எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கட்சித் தலைவர் கூட்டத்தில் கோரியுள்ளார்.

அதன்படி, அவருடைய கோரிக்கைக்கு ஆளுந்தரப்பும் இணக்கம் தெரிவித்தமையினால், எதிர்வரும் 7 மற்றும் 8ஆம் திகதிகள் என இரு நாட்களும் பிரதமரின் உரை மீதான விவாதத்தை முன்னெடுப்பதற்கு கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் ஏகமானதாக இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டின் தற்போதைய நெருக்கடி குறித்தும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்தும் இந்த விவாதத்தில் கவனம் செலுத்தப்படவுள்ளதாக பிரதான எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

## நாட்டு நிலைமை...

மின்வெட்டு போன்ற அழுத்தமான பிரச்சினைகளை உள்ளடக்கிய அரசாங்கம் எதிர்கொள்ளும் சவால்களை சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பான நிலைமையை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் முனனெடுத்த நடவடிக்கைகளை விரிவாக எடுத்துரைத்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், தேவைப்படும் நேரத்தில் தமது முழுமையான உதவிகளை வழங்குமாறு தூதுவர்களை கேட்டுக் கொண்டார்.

அவர் தனது உரையில், நாடாளுமன்றத்தில் உள்ள அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தையும் குறிப்பிட்டதுடன், இந்த முக்கியமான சட்டத்தின் சில முக்கிய அம்சங்களையும் சுட்டிக்காட்டினார்.

இராஜதந்திர உறுப்பினர்களின் பங்கேற்பிற்காக தனது பாராட்டுகளைத் தெரிவித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ், இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் குறிப்பாக சவாலான ஒரு கட்டத்தில் தமது ஆதரவையும் நல்லெண்ணத்தையும் வழங்குமாறு தூதுவர்களைக் கேட்டுக்கொண்டார்.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் சுருக்கமான விளக்கங்களை முன்வைத்து கேள்விகளுக்கு பதிலளித்தனர். இந்த மாநாட்டில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தனவும் இணைந்திருந்தார்.

## சிறுநீரக வியாபாரத்தில்...

ஆவண காப்பக அதிகாரி மருத்துவர் ஆனந்த ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

இலங்கை மருத்துவச் சபையில் பதிவு செய்துகொண்டுள்ள இரண்டு மருத்துவர்கள் சிறுநீரக விற்பனை தொடர்பான வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாக கொழும்பு ஹெவ்லொக் வீதியில் வசித்துவரும் மருத்துவர் ருவான் எம்.ஜயதுங்க முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த மருத்துவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் கண் மருத்துவமனை ஆகியவற்றில் சேவையாற்றி வருவதாக தெரியவந்துள்ளது. இந்த சிறுநீரக வியாபாரம் சம்பந்தமாக விசாரணை நடத்துமாறுகோரி பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**தகவல் வழங்கிய இந்தியப் பிரஜை**

கடந்த 2013ஆம் ஆண்டு இந்த சிறுநீரக வியாபாரம் தொடர்பாக இந்தியப் பிரஜை ஒருவரை குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்து, விசாரணைகளை நடத்தியிருந்தனர்.

இந்தியாவை சேர்ந்த அந்த சந்தேகநபர் மேற்படி மருத்துவர்கள் தொடர்பான தகவல்களை வெளியிட்டிருந்ததாகவும் இலங்கை மருத்துவச் சபையிடம் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள சில மாநிலங்களை சேர்ந்த நபர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு அவர்களிடம் இருந்து சிறுநீரகங்கள் பெற்றுக்கொள்ளப்படுவதாகவும் அவற்றை சிறுநீரக கோளாறுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கி சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை செய்வதற்கு பெருந்தொகை பணம் அறவிடப்படுவதாகவும் கடந்த காலங்களில் செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சகல அரச...

தற்போதுள்ள வளப்பற்றாக்குறையில் அரச செலவினங்களைக் குறைப்பதற்காகவும் அரச நிறுவனங்களின் ஊழியர்களை பணிக்கு அழைப்பதை மட்டுப்படுத்துவதற்காகவும் வெளியிடப்பட்ட அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே, வெள்ளிக்கிழமையன்று மக்கள் அரச அலுவலகங்களை நாடுவதை தவிர்க்குமாறு பணிப்பாளர் நாயகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## எரிபொருள்...

தனது உத்தியோகபூர்வ ட்விட்டர் தளத்திலேயே இது தொடர்பில் அவர் பதிவிட்டுள்ளார்.

அதன்படி, நேற்று (02) காலை 8.30 மணி வரையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கையிருப்பில், 18 ஆயிரத்து 825 மெற்றிக் தொன் டீசல், 42 மெற்றிக் தொன் சுப்பர் டீசல், 33 ஆயிரத்து 498 மெற்றிக் தொன் 92 ஒக்டெய்ன் பெற்றோல், 13 ஆயிரத்து 67 மெற்றிக் தொன் 95 ஒக்டெய்ன் பெற்றோல் மற்றும் 386 மெற்றிக் தொன் ஜெட் ஏ1 வகை எரிபொருள் கையிருப்பில் இருப்பதாக அவர் ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

## பொலிஸாரைத்...

ஏற்றப்பட்டிருந்த குளிர்சாதனப் பெட்டி பாதுகாப்பற்றதால் நுழைய அனுமதிக்க முடியாது என பொலிஸார் கூறியதையடுத்து இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிளை கெட்ட வார்த்தைகளால் திட்டி அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலிப் வெத ஆராச்சியின் புதல்வர் மற்றும் அவரது மனைவிக்கு எதிராக பொலிஸ் உத்தியோகஸ்தர் வீரகெட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இவர்கள் பயணம் செய்த டபிள் கெப் வாகனத்தின் பின்னால், குளிர்சாதனப் பெட்டியை பாதுகாப்பற்ற முறையில் ஏற்றிச் சென்றதை பொலிஸ் கான்ஸ்டபிள் கண்டித்துள்ளார்.

அப்போது திலிப் வெத ஆராச்சியின் மகனும் மருமகளும் கெட்ட வார்த்தைகளால் திட்டி அச்சுறுத்தியதாக பொலிஸ் கான்ஸ்டபிள் தனது முறைப்பாட்டில் கூறியுள்ளார்.


### வெற்றி நிச்சயம்

**உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்பு கொண்டால் 100% வெற்றி நிச்சயம். நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, வியாபார மந்தம், கடன், முன்னேற்றத்தடை, எதிரித் தொல்லை, வழக்கு, கொடுத்த பணம் திரும்பி வர, கணவன் மனைவி பிரச்சினை, நீண்டகால நட்பின் பிரிவால் வேதனை, நன்றாக பழகி பயனடைந்து விட்டு விலகிச்சென்றுவிட்டவர், குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு நினைத்தது நினைத்தப்படி நடக்க உடனே என்னை தொடர்புகொள்ளுங்கள். உலகப்புகழ்பெற்ற மலையாள மாந்திரீக ஜாம்பவான் தத்துவஞானி மகரிஷி தேசபந்து கௌரவ கலாநிதி ஸ்ரீமத் சுவாமிஜி 071 5869631 www.facebook.com / srimath Suwamiji**


## உரங்களை விரைவாக...

நேற்றுமுன்தினம் (01) பிற்பகல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

உமா ஓயா மற்றும் மொரகஹகந்த திட்டங்களை இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்து பெரும்போகத்திற்கான அனுகூலங்களை பெற்றுக் கொடுக்க முடியும் என கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது. மொராண, மஹகல்கமுவ சார் கால்வாய், மஹகோன குளம், விலகண்டிய குளம் மற்றும் கொடிகமுவ குளம் ஆகிய திட்டங்கள் இதற்கு இணையாக ஒரே நேரத்தில் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

வெளிநாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

கடந்த மூன்று நாட்களில் மொத்த மின் உற்பத்தியில் 80% நீர் மற்றும் காற்றாலை மின்சாரம் மூலம் தேசிய மின்கட்டமைப்பிற்கு வழங்கப்பட்டமை தெரியவந்துள்ளது. மிதக்கும் சூரியசக்தி பேனல் திட்டங்களை மேம்படுத்தவும் கூரையில் பொருத்தப்படும் சூரியசக்தி பேனல்களுக்கு வழங்கப்படும் உதவிகளை அதிகரிக்கவும் நுகர்வோரை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

சிறுபோகத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையின் கீழ் நீர் வழங்கப்படும் நீர்ப்பாசன நிலங்களில் 50% ஏற்கனவே பயிரிடப்பட்டுள்ளது. 225,000 மகாவலி வீட்டுத்தோட்டங்கள் மேலதிக பயிர்களை பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்ததோடு இதுவரை நெல் பயிரிடப்படாத காணிகளில் வேறு பயிர்களைப் பயிரிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அனுர திசாநாயக்க, அமைச்சின் செயலாளர் யு.டி.சி. ஜெயலால் மற்றும் அமைச்சின் துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகளும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (02) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருந்த கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை ஒக்டோபர் மற்றும் நவம்பர் காலப்பகுதியில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் 2022 டிசம்பர் 22 மற்றும் 23ஆம் திகதிவரை பாடசாலைகளை நடத்துவதற்கு வாய்ப்புள்ளது. இக் காலப்பகுதிக்குள் முடிந்தவரை மாணவர்களுக்கு தேவையான பாடசாலை நாட்களை வழங்கி, இவ்வருடத்திற்கான பாடத்திட்டங்களை முழுமையாக நிறைவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இதேவேளை, 2023ஆம் ஆண்டுக்கான பாடப்புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள், பரீட்சைத் திணைக்களத்துக்கு தேவையான கடதாசிகளை பெற்றுக்கொள்வதற்கான நிதியை திறைசேரி மற்றும் கடன் திட்டங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு தேவையான திட்டங்களை தயாரித்து உரிய பிரிவுக்கு அனுப்பிவைத்துள்ளோம். அதேபோன்று, சீருடையை வழங்குவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுத்துவருகின்றோம்.

போசனை வேலைத்திட்டங்களையும் மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளையும் மும்முரமாக முன்னெடுத்து வருகின்றோம். இதேவேளை, பல்கலைக்கழகங்களிலுள்ள புலமைப்பரிசில் பெறும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் குறித்து நாங்கள் அதிகம் அவதானம் செலுத்தியுள்ளோம்.

மேலும், கல்வியற்கல்லூரிகளிலுள்ள ஆசிரியராகும் கனவுடன் பயற்சிகளை பெற்றுக்கொண்டிருக்கும் இரு பிரிவுகளில் முதல் பிரிவுக்கு விரைவில் பரீட்சையை நடத்தி, அவர்களுக்கான நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.

பொருளாதார நெருக்கடியால் பாடசாலை மாணவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். எனவே, முடிந்தவரை பாடசாலையை நடத்திச் செல்வதே எங்களுடைய முக்கிய பொறுப்பாகவுள்ளது.

இந்த நிலையில், சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதற்கு பல தரப்பினரும் பெரும் உதவிகளை செய்தனர். சில இடங்களில் வாகன வசதிகள், சீரற்ற காலநிலையின்போதும் பாரிய உதவிகளும் கிடைத்தன – என்றார்.

# சீரற்ற காலநிலை காரணமாக ஏழு மாவட்டங்களில் 357 குடும்பங்களைச் சேர்ந்த 22,338 பேர் பாதிப்பு

(நமது நிருபர்)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஐயாயிரத்து 357 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 338 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. அத்துடன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

இரத்தினபுரி, கேகாலை, கண்டி, களுத்துறை, கம்பஹா, கொழும்பு, மாத்தறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தோரே சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரியில் 908 குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரத்து 426 பேரும் கேகாலையில் 41 குடும்பங்களைச் சேர்ந்த 153 பேரும் கண்டியில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேரும் களுத்துறையில் 48 குடும்பங்களைச் சேர்ந்த 172 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், கம்பஹா மாவட்டத்தில் இரண்டாயிரத்து 442 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 425 பேரும் கொழும்பில் ஆயிரத்து 889 குடும்பங்களைச் சேர்ந்த ஏழாயிரத்து 23 பேரும் மாத்தறையில் 17 குடும்பங்களைச் சேர்ந்த 89 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



அடைமழை, வெள்ளம் காரணமாக மேல் மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையிலானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, 174 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. மேலும், 10 பாதுகாப்பான இடங்களில் 192 குடும்பங்களைச் சேர்ந்த 690 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

# முச்சக்கரவண்டி விபத்தில் தாயும் மகளும் உயிரிழப்பு

## கவறக்குளத்தில் சம்பவம்

(அநுராதபுரம் செய்தியாளர்)

கெக்கிராவ - அநுராதபுரம் பிரதான வீதியின் கவறக்குளம் வண்ணம்மடுவ பகுதியில் முச்சக்கரவண்டியொன்று கால்வாயில் விழுந்து இடம்பெற்ற கோர விபத்தில் தாயும் மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த தந்தையும் மகனும் ஆபத்தான நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று அதிகாலை 5.15 மணியளவில் கவறக்குளம் பொலிஸ் பிரிவின் வண்ணம்மடுவ பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளை ரத்மல்கஹஎல பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய தாயும் 14 வயதுடைய மகளுமே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

முச்சக்கர வண்டியின் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை காரணமாக இவ்விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் உயிரிழந்த தாய் மற்றும் மகள் ஆகியோரது சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டது.



இது தொடர்பான மேலதிக விசாரணைகள் அநுராதபுரம் கவறக்குளம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் அபேசேகர தலைமையில் முன்னெடுக்கப்படுகிறது.



குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாட்டுப் பிரதானியாக நியமிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர், எதிர்க்கட்சியின் பிரதம கொறடா மற்றும் ஐக்கிய விவசாயிகள் சக்தியின் தேசிய அமைப்பாளர் போன்ற பதவிகளிலும் நளின் பண்டார கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 695 பில்லியன் ரூபா குறைநிரப்பு மதிப்பீடு பற்றிய விவாதம் 08ஆம் திகதி நாடாளுமன்றில்

## நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானம்





அத்தியாவசிய அரச சேவைகளைத் தடைகளின்றி தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் 07ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள 695 பில்லியன் ரூபா குறைநிரப்பு மதிப்பீடு தொடர்பான விவாதத்தை எதிர்வரும் 08ஆம் திகதி பி.ப 5.30 மணி வரை நடத்துவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

அத்துடன், 2020ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளைகள் அன்றையதின விவாதத்தின் பின்னர் நிறைவேற்றப்படும் எனவும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (02) முற்பகல் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதேநேரம், எதிர்வரும் 07ஆம் திகதி முற்பகல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட 2022.04.09ஆம் திகதிய 2274/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி மற்றும் கடன் எல்லையை ஒரு ட்ரில்லியன் ரூபாவினால் உயர்த்துவதற்கு உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானம் என்பன விவாதம் இன்றி நிறைவேற்றப்படவுள்ளன.

அதன் பின்னர் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவால் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் விசேட அறிவிப்பொன்று முன்வைக்கப்படவிருப்பதுடன், அது குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் பி.ப 5.30 மணி வரை நடைபெறவுள்ளது.

# வறிய மக்களுக்கு சமைத்த உணவு வழங்க நடவடிக்கை

## சர்வோதய அமைப்பினால் ஏற்பாடு

நாட்டில் நிலவும் உணவு நெருக்கடிக்கு தீர்வாக நாடு முழுவதும் பொது சமையலறைகள் அமைக்கப்படும் என சர்வோதய அமைப்பு தெரிவித்துள்ளது.

உணவு மற்றும் பானங்களை கூட்டாக தயாரிக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளதாக அவ்வமைப்பின் தலைவர் வின்யா ஆரியரத்ன தெரிவித்தார். இதன் மூலம் நாட்டில் ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படுவதை குறைக்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு, குறிப்பாக நகர்ப்புறங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு சூடான உணவை வழங்குவதே இதன் நோக்கமாகும் என்றார்.

சர்வோதய அமைப்பானது இந்த வேலைத்திட்டத்தை 06 முதல் 12 மாத காலத்திற்கு முன்னெடுக்க முடியும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், இவ்வாறானதொரு கருத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலையில் நாட்டின் பொருளாதாரம் இருப்பது ஒரு அவல நிலை என அதன் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# வைத்தியரை தாக்க முயன்ற எண்மர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பகுதியில் உள்ள அரச வைத்தியசாலை ஒன்றில் கடமையாற்றும் வைத்தியரை தாக்கச் சென்ற குற்றச்சாட்டிலும், வைத்தியசாலைக்குள் நுழைந்து குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டிலும் நேற்று (02) பிற்பகல் 08 இளைஞர்களை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாத்தாவை அழைத்துக்கொண்டு 23 வயதான யுவதி ஒருவர் குறித்த அரச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளார்.

இந்நிலையில், வயோதிபரை பரிசோதித்த வைத்தியர் அவரை சிகிச்சைக்காக அனுப்பி வைத்த பின்னர் யுவதியின் தொலைபேசி இலக்கத்தை கேட்டதாகவும், யுவதி தொலைபேசி இல்லை எனக் கூறிய நிலையில் தனது தொலைபேசி இலக்கத்தை எழுதி யுவதியிடம் வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், வீடு திரும்பிய யுவதி சம்பவத்தை தனது உறவுகளுக்கு தெரிவித்த நிலையில், 8 இளைஞர்கள் வைத்தியசாலைக்கு சென்று வைத்தியருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், அவரை பொலிஸ் நிலையம் இழுத்துச் செல்லவும் முற்பட்டுள்ளனர்.

இந்நிலையில், குறித்த வைத்தியர் பொலிஸாருக்கு தொலைபேசி வாயிலாக தகவல் வழங்கிய நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் 8 இளைஞர்களையும் கைது செய்துள்ளனர்.

# சீனாவிலிருந்து முதல்கட்ட மருந்து இன்று நாட்டுக்கு!

சீனாவிலிருந்து 500 மில்லியன் நிதியுதவியின் கீழ், முதல் தொகுதி மருந்துப் பொருட்கள் இன்று நாட்டை வந்தடையவுள்ளன.

அதற்கமைய, 10 மில்லியன் ரூபா மதிப்புள்ள உயிர்காக்கும் உபகரணங்கள் மற்றும் இரண்டு இலட்சத்து 56 ஆயிரத்து 320 சிரிஞ்சுகள் அதில் உள்ளடங்குகின்றன.

அத்துடன், இரண்டு இலட்சத்து 56 ஆயிரத்து 320 சிரிஞ்சுகளின் இரண்டாவது தொகுதி இம்மாத நடுப்பகுதியில் வரவுள்ளன.

குறித்த மருந்துப்பொருட்கள் 6 மாதங்களுக்குப் பயன்பாட்டிற்கு போதுமானதாக இருக்கும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# எல்பிட்டியவில் குண்டு வெடிப்பு

எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டபொல நாகஹாதென்ன பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று (02) காலை குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதன்போது காயமடைந்தவர் அயலவர்களின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வீட்டில் மறைத்து வைக்கப்பட்ட குண்டு ஒன்றே இவ்வாறு வெடித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# அநுராதபுரத்தில் 05 மாதங்களில் 13 எயிட்ஸ் நோயாளர்கள்

அநுராதபுரத்தில் இந்த வருடத்தில் முதல் ஐந்து மாதங்களில் 13 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதாக பாலியல் சுகாதாரம் தொடர்பான அநுராதபுரம் மத்திய நிலையத்தின் வைத்திய அதிகாரி ஹேமா வீரகோன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பற்ற உடலுறவு முறையே இதற்கு பிரதான காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கஹட்டகஸ்திகிலிய, தம்புத்தேகம, ஹொரவப்பொத்தானை, நுவரகம் பகுதி, மதவாச்சி ஆகிய பகுதிகளிலேயே நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

அநுராதபுரத்தில் 20 வருடங்களுக்கு முன்னர் முதன்முறையாக எயிட்ஸ் நோயாளியொருவர் இனங்காணப்பட்டார். இது வரை காலமும் 94 பேருக்கு தொற்று பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அந்த மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டே அதிக எண்ணிக்கையிலானோர் எயிட்ஸ் நோயுடன் அடையாளங்காணப்பட்டனர். அந்த எண்ணிக்கை 15 ஆகும் என வைத்தியர் ஹேமா வீரகோன் தெரிவித்துள்ளார்.

# டன்பார் முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

நுவரெலியா, ஹட்டன் பெரிய டன்பார் கீழ்ப் பிரிவு அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய அனாவர்தன நூதன பிரதிஸ்டா நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா எதிர்வரும் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் 06ஆம் திகதி திங்கட்கிழமை காலை 09 மணியளவில் ஹட்டன் நகர் மாவடி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இருந்து பக்தர்கள் புடைசூழ யானை பவனி மற்றும் நடன கலைஞர்களுடன் மங்கள வாத்தியங்கள் முழங்க தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு ஆரம்பமாகி ஹட்டன் நகர் வலம் வந்து பழைய கொழும்பு வீதியூடாக ஆலயத்தை சென்றடையவுள்ளது.

மேலும், 07ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி முதல் மறுநாள் 8ஆம் திகதி புதன்கிழமை மாலை 3.00 மணி வரை இரண்டு நாட்கள் அடியார்கள் எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறும். மறுநாள் 09 ஆம் திகதி வியாழக்கிழமை சுபநேரமாகிய 9.15 மணிக்கு விமான கோபுர ஸ்தூபி கும்பாபிஷேகம் நடைபெற்று காலை 9.55 மணிக்கு மூல கருவறையில் வீற்றிருக்கும் ஸ்ரீமுத்துமாரியம்மனுக்கு ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று அடியார்களுக்கு விபூதி பிரசாதம், அன்னதானம் என்பன வழங்கப்படும்.

கிரியைகளை கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமகுரு கொட்டகலை நகர் ஸ்ரீமுத்துவிநாயகர் சுவாமி தேவஸ்தான பிரதமகுரு, அகில இலங்கை ஐக்கிய இந்து குருமார் சங்கம் ஸ்ரீவித்யா வேத பாடசாலையின் ஸ்தாபகர் தற்புருஷ சிவாச்சாரியார் சிவஸ்ரீ ச.ஸ்கந்தராஜ குருக்கள் தலைமையில் ஏனைய சிவாச்சாரியார்கள் இணைந்து நடத்தி வைக்கவுள்ளனர்.





எரிவாயு சிலிண்டர்களைப் பெறுவதற்காக கொழும்பு, குணசிங்கபுரவில் நீண்ட வரிசையில் மக்கள் நேற்று காத்திருந்தனர். மேலும், சிலிண்டர்களுக்கான டோக்கன்களைப் பெறுவதற்கு குறித்த பிரதேசத்தில் உள்ள அரசியல்வாதிகள் தலையிடுவதாகவும் இதன்போது மக்கள் குற்றஞ் சுமத்தியுள்ளனர். (படப்பிடிப்பு ஏ.எஸ்.எம். ஜாவித்

கம்பஹா கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலையொன்றில் வெள்ளம் மற்றும் மழைத் தூறல்களின் மத்தியில் வகுப்பறையில் சாதாரண தர மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியமை தொடர்பில் கல்வியமைச்சு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் குடை பிடித்தபடி அமர்ந்திருப்பது போன்ற புகைப்படங்கள் சமூகவலைத்தளங்களில் பரவின.

துரித நடவடிக்கை எடுத்து பரீட்சை மண்டபத்தை மாற்றாதது, பரீட்சைகள் திணைக்களத்திற்கு முறையிடாதமை குறித்து பரீட்சைகள் திணைக்களம் மூலம் விசாரணை நடத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக 2021 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

விடைத்தாள்கள் நனைந்ததால் சில மாணவர்கள் பரீட்சைக்கு முகம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையை கருத்தில் கொண்டு கல்வி அதிகாரிகள் நியாயமான தீர்வை வழங்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், கலை மாணவர்களின் கலைப் படைப்புகள் நனைந்து அவை உலராமல் இருந்ததால் அவர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டதாக குறிப்பிட்ட அவர், பரீட்சை நிலையங்களுக்குச் செல்வதில் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொண்டதாகவும் தெரிவித்தார்.

மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடந்துமுடிந்த க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையை எதிர்கொண்ட மாணவர்கள் நாட்டின் பல்வேறு நெருக்கடியை எதிர்கொண்டபடியே பரீட்சைக்கு தோற்றினர் என்றால் மிகையாகாது.

மாணவர்களை பரீட்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல பெற்றோருக்கு எரிபொருள் இல்லை. எரிபொருள் தட்டுப்பாட்டால் தமது பிள்ளைகளை உரிய நேரத்திற்கு சமுகமளிக்க வைப்பதற்கு மிகுந்த சிரமம் அடைந்ததாக பெற்றோர் பலர் சுட்டிக்காட்டியிருந்தனர். பரீட்சை அனுமதி அட்டையை வைத்து பெற்றோர்களுக்கு குறிப்பிடப்பட்டளவு

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, ஜூன் 03ஆம் திகதி, வெள்ளிக்கிழமை**

# அரசியல்வாதிகளால் வந்த சாபக்கேடு!

எரிபொருள் வழங்குவதற்கு அந்தந்த பிரதேச செயலாளர் ஊடாக பணிப்புரை வழங்கப்பட்டாலும் பெற்றுக்கொள்ளுமளவுக்கு எரிபொருள் இல்லை. துவிச்சக்கரவண்டிகளை அல்லது மோட்டார் சைக்கிள்களை எத்தனை பேரால் பயன்படுத்த முடிந்தது. மின்வெட்டு அமுலாக்கம் பரீட்சைக்காலத்தில் இல்லாமல் இருந்தமை சற்று ஆறுதலே. என்றாலும், நடைமுறை வாழ்வில் மாணவர்கள் பெரிதும் துன்பப்பட்டனர். அதற்குள் இயற்கையின் சீற்றமும் இணைந்துகொண்டது.

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் வரலாற்றில் 2021 (2022) க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மிகவும் கடினமானதும், சவாலானதுமாக அமைந்தது என பரீட்சை ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளமை ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

*''2021 ஆம் வருடத்தில் பரீட்சைக்கு முகங்கொடுக்க வேண்டிய மாணவர்கள் 2022 ஆம் வருடத்திலேயே பரீட்சையை எதிர்கொள்ள நேரிட்டது. நாட்டில் ஏற்பட்ட கொரோனா பரவல் காரணமாக பிற்போடப்பட்டு வந்த சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதில் மேலும் பல நிர்வாக, பொருளாதார சிக்கல்களையும் சந்திக்க வேண்டியிருந்தது.*

*“கொடுப்பனவுகள் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள் காரணமாக பரீட்சை நிலையங்களில் பல அதிகாரிகள் மற்றும் கண்காணிப்பாளர்கள் கடமைக்கு முன்வரவில்லை. ஆனால், அந்தப் பிரச்சினைகள் ஒருவாறு தீர்க்கப்பட்டன. அதைத் தொடர்ந்து பல வன்முறை சம்பவங்கள், ஊரடங்கு உத்தரவு மற்றும் உள்நாட்டு கலவரங்கள் என பல சவால்களை சந்திக்க வேண்டியிருந்தது. அச்சிடுதல், போக்குவரத்து மற்றும் தடையில்லா மின்சாரம் போன்ற வசதிகளை பெற்றுக் கொள்வது கடினமாக இருந்தது.*

*காகிதம் மற்றும் மை போன்ற சில மூலப்பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் இதற்கான செலவுகள் தாங்க முடியாதவையாக இருந்தன. எவ்வாறாயினும், இத்தனை சிரமங்கள் மற்றும் குறைபாடுகள் இருந்தபோதிலும், 3,844 பரீட்சை நிலையங்களிலும் 542 பரீட்சை ஒருங்கிணைப்பு நிலையங்களிலும் 517,496 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றினர். தேர்வை வெற்றிகரமாக நடத்த 45,000 அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். எனினும், இந்தப் பரீட்சை வரலாற்றில் சவாலானது''* என்று பரீட்சைகள் ஆணையாளர் கூறியுள்ளதன்மூலம் நிலைமையை புரிந்துகொள்ள முடிகிறது.

இவ்வாறான பின்னணியில், கம்பஹாவில் மாணவர்கள் குடையைப் பிடித்துக்கொண்டு பரீட்சை எழுதிய விடயம் தொடர்பில் சமூக ஊடகங்களில் பரீட்சைகள் திணைக்களம் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த நிலைமைக்கு கல்வி அதிகாரிகளை விமர்சிப்பதில் அர்த்தமில்லை. இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பரீட்சையை நடத்தியமைக்கு கல்வித்துறை அதிகாரிகளை பாராட்டியாகவேண்டும்.

ஆனால், மழை நீர் ஒழுகும் பாடசாலைகளை வைத்துக்கொண்டு பல கோடி ரூபாவை அள்ளிக்கொட்டி தாமரைக்கூண்டு கோபுரத்தை கட்டியும், அரசியல்வாதிகளின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை புனரமைத்தும் உருப்படியில்லாத வேலைகளை செய்த அரசியல்வாதிகளே இந்த நிலைமைக்கு காரணம். பாடசாலைகளை புனரமைத்தால் அதில் எதிர்பார்க்குமளவுக்கு கமிஷன் கிடைக்காது என்ற காரணத்தினாலோ என்னவோ அவை குறித்து அரசியல்வாதிகள் கூடுதல் அக்கறை காட்டுவதில்லை.

அதற்கு கம்பஹா பாடசாலை நல்லதொரு உதாரணம். அதுதான் இந்த நாட்டின் சாபக்கேடு. அதற்காகத்தான் அரசியல்வாதிகள், திட்டப்படவேண்டியவர்களென வலியுறுத்திக் கூறுகிறோம்.



# காலத்தின் அருமை கருதுவோம்!

இந்தியாவில் எத்தனையோ மதங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மதம் உண்டு. ஆனாலும் எல்லாராலும் கடைப்பிடிக்கப்படுகின்ற மதம் ஒன்றே ஒன்றுதான், அதுதான் தாமதம் என்று சொன்னவர் கவியரசு கண்ணதாசன்.

அது தவிர்க்க இயலாத தனிமதமாக, இன்றளவும் எல்லாருக்குமான பொதுமதமாக இருந்து வருகிறது. திருமணத்தின் முகூர்த்த நேரம் ஒன்றுதான் முறைப்படி அப்படியே கடைப்பிடிக்கிற ஒழுங்குக்கு உள்ளடங்கியிருக்கிறது. மற்றபடி, பொது அரங்க நிகழ்வுகள் பெரும்பாலும் காலங்கடந்தே தொடங்கப்படுகின்றன; கால நீட்சிபெற்றே முடிவுறுகின்றன.

அப்போதெல்லாம் தப்பாமல் சொல்லப்படுகிற வாசகம், "காலத்தின் அருமை கருதி. இது ஒப்புக்குச் சொல்லப்படுகிறதா? உணர்ந்து மொழியப்படுகிறதா என்று தெரியாது. அதன் அருமை தெரியாமலேயே பெரும்பாலான நிகழ்வுகள் நடந்துகொண்டே இருக்கின்றன.

ஒரு நிகழ்வுக்காக, பல மணி நேரங்கள் பயணம் செய்து வருகை தரும் சிறப்புப் பேச்சாளருக்கு, சில மணித்துளிகள் தந்து, "காலம் கடந்துவிட்டபடியால், விரைந்து முடித்து விடுமாறு வேண்டுதல் விடுப்பதுண்டு. அவரும், "இன்னும் ஒரு கருத்தைச் சொல்லி, என் உரையை நிறைவுசெய்வேன் என்று இன்னும் இன்னும் சில சொல்லி முடிப்பதற்குள் அமைப்பாளர் கைபிசைந்து நிற்பார்; நாகரிகமாகத் தண்ணீர்க் குடுவையை முன்கொண்டுவந்து நீட்டுவதுண்டு; அதையும் கடந்து அவர் பேசிக்கொண்டு போனால், "இத்துடன் முடித்துக் கொள்ளவும் என்று துண்டுச் சீட்டெழுதி வைப்பதும் உண்டு; அப்போதும், "காலத்தின் அருமை கருதி இன்னும் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி... என்று நீட்டத் தொடங்கும்போது, இடைவிடாது கரவொலி எழுப்பி, அவையினர் அவரை விடைபெற வைப்பதும் உண்டு.

அவர் என்ன செய்வார்? நிகழ்ச்சி உறுதி செய்த நாளில் இருந்து தலைப்புக் குறித்துச் சிந்தித்துத் தயார் செய்து வைத்திருப்பாரே. பல பேச்சாளர்கள் தாங்கள் தயாரித்துக் கொண்டுவந்த அனைத்தையும் சொல்லியே தீர்வது என்று பேசுவதும் உண்டு; அல்லது அந்த நேரத்தில் ஒலிபெருக்கி முன் வந்து நின்று என்ன தலைப்பு என்று கேட்டு, சிந்தையில் உதித்தவற்றையெல்லாம் சொல்லி முடித்து, "இன்னும் எவ்வளவோ சொல்லத் தோன்றுகிறது. ஆனாலும், காலத்தின் அருமை கருதி எனச் சொல்லி விடைபெற்றுக் கொள்வதும் உண்டு.

சிறப்புப் பேச்சாளருக்குச் சரிவாய்ப்பும், ஏனைய பேச்சாளர்களுக்குச் சமவாய்ப்பும் தரவேண்டும் என்று என்னதான் திட்டமிட்டிருந்தாலும், இடைச்செருகலாகச் சிலரைச் சேர்ப்பதும், கூடுதலாக, மரியாதை செய்தல், அறிவித்தல் எனச் சேர்த்துக் காலநீட்டிப்புச் செய்வதும் தவிர்க்கமுடியாமல் போய்விடுவதுண்டு.

மாலை நிகழ்வு ஆறுமணிக்குத் தொடங்கும் என்று அழைப்பிதழில் போட்டிருந்தால், "மெதுவாகத்தானே தொடங்குவார்கள் என்று பார்வையாளர்கள் ஏழு மணிக்கு வருவார்கள். பார்வையாளர்கள், தாமதமாய்த்தான் வருவார்கள் என்பதனால், ஆறு மணிக்குப் பதிலாக ஐந்து மணிக்கு என்று போட்டுவிட்டு, இன்னும் கூட்டம் வரவில்லை என்று நிகழ்வைத் தாமதமாகத் தொடங்குவதும் இயல்பாய்ப் போய்விட்டது.

முன்பெல்லாம் பேச்சாளர்கள் எப்பொழுது வருவார்கள் என்று கூட்டம் காத்திருக்கும்; இப்பொழுதோ, கூட்டம் வரட்டும் என்று பேச்சாளர்களும் அமைப்பாளர்களும் காத்திருக்க நேர்கிறது.

பேச்சின் தரம் அப்படியா, கேட்போர் தரம் மாறியிருக்கிறதா என்று தெரியவில்லை. காட்சி ஊடகங்களைக் காணுகிறவர்கள் பெருகியிருக்கிறார்கள். அவற்றில் தோன்றுகிறவர்களை அழைத்து நிகழ்ச்சிகள் நடத்தினால் கூட்டம் வரும் என்று கருதவும் செய்கிறார்கள். படாடோபமான விளம்பரங்கள், அறிவிப்புகள் என எத்தனை செய்தாலும் வருகிற கூட்டமே வருகிறது என்றும் சொல்கிறார்கள்.

"முன்னிலையாளர்களாக இத்தனைபேர் எதற்கு எனக் கேட்டால், "பிறகு எப்படிக் கூட்டம் வரும் என்று கேட்கிற அமைப்பாளர்கள் இருக்கிறார்கள். நிகழ்வுக்கு முன்னால் வந்து அமர்கிறவர்களின் பெயர்ப்பட்டியல் அது என்று பின்னால்தான் தெரிந்துகொள்ள முடியும். முன்பெல்லாம் பேச்சாளர், பேசிவிட்டு, அவசரமாகப் பயணம் செய்யவேண்டி, மன்னிப்புக் கேட்டுக்கொண்டு இடையில் விடைபெறுவதுண்டு. இப்போது, மரியாதை நிமித்தம் வந்து அமர்ந்து முகம் காட்டிவிட்டு இடையிலேயே எழுந்து போகிற பார்வையாளர்கள் அதிகம்.

இரண்டு அல்லது மூன்று மணிநேர நிகழ்வுக்கு, பத்துப் பதினைந்து பேர் பேச அழைக்கப்படுவார்கள். இரத்தினச் சுருக்கமாய்ப் பேசுமாறு விண்ணப்பமும் விடுக்கப்படும். புரவலர்களையெல்லாம் முன்னிலையாளர்களாக்குவதும், அவர்களை, "சில மணித்துளிகள் பேசுமாறு அழைப்பதும் ஒரு சடங்கு. அவர்களும் ஒலிபெருக்கி முன் வந்து, தன் கையிலுள்ள அழைப்பிதழை வைத்துக்கொண்டு, அதில் இடம்பெற்றுள்ள பெயர்களையெல்லாம் தவறாமல் விளித்து, "அவர்களே, அவர்களே என்று சொல்வதும், அதைக் கேட்கும் பெயராளர்கள் புன்னகை பூப்பதும், மெல்லக் கைகுவித்து வணங்குவதும் ஒத்திகையில்லாத அரங்கேற்றமாகும்.

பேச்சு, சுவாரஸ்யமாக இல்லையென்றால், அவையினர் பேசத் தொடங்குவதும், அறிவிப்பாளரோ, தலைவரோ, "அமைதி காக்கும்படி வேண்டுகோள் விடுப்பதும் அடிக்கடி நிகழும். அதற்கென்றே சில மணித்துளிகள் செலவிடவும் நேரும்.

முன்னிலையாளர்கள் எல்லாம், சொல்லியும் சொல்லாமலும் விடைபெற்றுக் கொண்ட பின்னர் மேடையிலும், அரங்கிலும் காலியான நாற்காலிகளே மிகுந்திருக்க, "காலத்தின் அருமை கருதிச் சிறப்புப் பேச்சாளர் பேசத் தொடங்கும்போது அவையின் தலைவர், நன்றி நவில்பவர், அமைப்பாளர், ஒலிபெருக்கி அமைப்பாளர் உள்ளிட்ட சிலர் மட்டும் பொறுமை காத்திருப்பர், முன்பெல்லாம் தலைமையுரைக்கும், சிறப்புரைக்கும்தான் தனி முக்கியத்துவம் இருக்கும். இப்போதோ, இணைப்புரையாளர்கள்தாம் அதிகநேரம் எடுத்துக் கொள்கிறார்கள். பேச்சுக்கு முன், பேச்சுக்குப் பின் என்று அவர்கள் நீட்டிமுழக்கத் தயாரித்துக் கொண்டுவரும் குறிப்புகள் பலநாள் தயாரிப்பாக இருக்கும்; இதற்கென்றே தனியேடு போட்டு எழுதி வைத்திருப்பதும் உண்டாம்.

காலத்தின் அருமையும் தேவையும் கருதி, நிகழ்த்தப்பெற்ற பொழிவுகளால் எழுச்சி பெற்ற தலைமுறைகளே இன்றும் நிகழ்வுகளில் பங்கேற்கிறார்கள். செவியுணவின் சுவையறிந்த தலைமுறை அது; அதன்வழி, தமிழுணர்வைத் தக்கவைத்துக் கொண்ட தலைமுறையும்கூட.

கற்றுப் பெற்ற அறிவைவிடவும் கேட்டுப்பெற்ற ஞானத்தால் தம்மைச் செழுமைப்படுத்திக் கொண்ட தலைமுறையைத் தொடர்ந்து வருவோரைக் காணோம்.

அன்பர் ஒருவர் என்னிடம் ஆயாசப்பட்டுச் சொன்ன செய்தி நினைவுக்கு வருகிறது. "இன்னும் இந்த விழாக்கள் யாருக்காக நடத்தப்படுகின்றன? திரும்பத் திரும்ப வந்தவர்களே வருகிறார்கள்; அழைக்கப்படுபவர்களே மீளவும் அழைக்கப்படுகிறார்கள்; தலைப்புகளும் கிட்டத்தட்ட ஒரே மாதிரிதான். நவரசம் ததும்ப உரையாற்றும் பேச்சாளர்கள் அருகிப்போய் நகைச்சுவைத் துணுக்கு களை மட்டுமே உதிர்ப்பவர்கள் மிகுந்து விட்டார்கள். அதிலும் கூறியது கூறலே அதிகம். ஏதேனும் ஒரு புதிய செய்தியை, சிந்தனையைச் செவிமடுக்கலாம் என்கிற எண்ணத்திற்கே இடமில்லாமல் போய்விட்டது. முறையான உச்சரிப்பு, குரலில் ஏற்ற இறக்கம், கவிதைக்கும் உரைநடைக்கும் வேறுபாடறியச் சொல்லும் பாங்கு எல்லாம் போய், பெருங்குரல் எடுத்துப் பேசுவதும், "இந்த இடத்தில் நீங்கள் கைத்தட்ட வேண்டும் என்று அடிக்கடி சொல்லிக் கைத்தட்டல் வாங்குவதும் இப்போது, வழக்கமாகிவிட்டது. மரபுசார் வட்டார வழக்குகள் குறைந்து, சிறிய, பெரிய திரைசார் மொழிநடையே ஆதிக்கம் செலுத்திவருகிறது. சிந்தனையைக் கிளர்த்தும் செய்திகளை முன்வைத்து, யாரேனும் பேசிவிடுவார்களேயானால், அடுத்து வருகிறவர் அள்ளித் தெளிக்கிற சிரிப்புத் துணுக்குகளுக்கு முன்னால் அவர்களின் சிந்தனைத் தெறிப்புகள் அடையாளம் தெரியாமல் கரைந்துபோய்விடுகின்றன. அந்த ரசனைக்குரிய மனநிலையிலேயே அவையினரை வைத்திருப்பதில் அநேகர் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள்.

கொரோனா தீநுண்மிப் பரவலைத் தடுக்குமுகமாக, நடைமுறைப்படுத்தப்பட்ட பொதுமுடக்கத்தால், பல அரங்க நிகழ்வுகள் நடைபெறாமலேயே நின்றுவிட்டன. தளர்வுகளுடன் கூடிய நிகழ்வுகள் தற்போது பழையபடி தொடங்கப்படுகின்றன. ஆனாலும், முன்புமாதிரி கூட்டம் வரவில்லை. வந்தவர்களில் பலர் அரங்கில் இருந்தாலும், அவர்களின் கவனங்கள் அவரவர் கரங்களில் இருக்கின்ற கைப்பேசிகளில் பதிந்திருக்கின்றன. ஈர்த்து வசப்படுத்தும் ஆற்றல் பேச்சாளர்களுக்கு எவ்வளவு இருக்கும் என்று தெரியவில்லை.

அரங்கம் அமைக்க, அழைப்பிதழ் தயாரித்து அளிக்க, அழைக்க, நடத்தி முடிக்க என எத்தனையோ செலவுகள் செய்து நிகழ்வுகள் அமைக்கப்படுகின்றன. நிதிச்செலவைவிடவும், நிர்வகிப்பதற்கான உடல் உழைப்புப் பெரிது. இவ்வளவு செலவிட்டு நிகழ்த்தப்படும் விழாக்களினால் விளையும் பயன் யாது? பொழுதுபோக்கு என்ற பொதுச்சொல்லுக்குள் அரங்க நிகழ்வுகளை அடக்கி அமைதி கொள்வது சரிதானா?

பேசுகிறவர் ஒருவர்; கேட்போர் பலர். பேச்சாளருக்கு வழங்கப்படுகிற காலம், பத்துமணித்துளிகள் என்றால், அரங்கில் இருப்பவர்கள் ஐநூற்றுவர் எனில், ஐயாயிரம் மணித்துளிகள் அங்கே செலவிடப்படுகின்றன என்பது கணக்கு. அதனால் ஏற்படும் வரவு யாது என்பதை இருதரப்பாரும் எண்ணிப்பார்க்க வேண்டியது இன்றியமையாதது.

மற்ற கணக்குகள் இருக்கட்டும், மனித வாழ்வின் மகத்தான பொழுதுகளைச் செலவிட்டுச் செய்யும் இந்த ஒற்றைக் கணக்கையேனும் தயவுகூர்ந்து நினைவில் கொள்ளுங்கள் என்று உரத்துக் கூறவேண்டியிருக்கிறது.

**கிருங்கை சேதுபதி**
**எழுத்தாளர்.**

## இன்றைய நாளில்...

- **1834 – கொழும்பு நகரில் புறக்கோட்டை, கோட்டை பகுதிகளில் காணிகளை வாங்க தமிழருக்கும், சோனகருக்கும் அனுமதி வழங்கப்பட்டது.**
- **1965 – நாசாவின் ஜெமினி 4 விண்கலம் ஏவப்பட்டது. எட்வேர்ட் வைட் 21 நிமிடங்கள் விண்ணில் நடந்து சாதனை படைத்தார். இவரே விண்ணில் நடந்த முதலாவது அமெரிக்கர் ஆவார்.**
- **1984 – புளூஸ்டார் நடவடிக்கை: அம்ரித்சரில் சீக்கியர்களின் புனிதப் பொற்கோயிலுள் இந்திய இராணுவத்தினர் புகுந்தனர். ஜூன் 6 வரை இடம்பெற்ற இந்நடவடிக்கையில் 5,000 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.**
- **2007 – விசாரணைக்காக கைது செய்யப்பட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ்ப் பணியாளர்கள் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.**

## நக்கல் நமசிவாயம்

**பாண் ரெண்டு இறாத்தல் தங்கோவெண்டு கடைக்காரரிட்ட சத்தமா கேட்டன்...கடையில நிண்ட ஆக்கள் எல்லாம் திரும்பிப் பார்க்கிறாங்கள்...வசதியான ஆள் எண்டு நினைச்சிட்டாங்க போல...**



# நாட்டின் பேராபத்து பற்றிய சிவப்பு சமிக்ஞைகள் 2020 ஜனவரியிலிருந்தே சுட்டிக்காட்டப்பட்டன




இன்று நாடு வீழ்ச்சியடைந்து கடும் நெருக்கடியில் சிக்கியுள்ளதாகவும், இந்த அழிவு ஏற்படுமென தான் 2020 ஜனவரியிலிருந்தே நாட்டுக்கு வெளிப்படுத்தியதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சுதேச மற்றும் பாரம்பரிய வைத்தியர்களின் குழுவொன்று எதிர்க்கட்சித் தலைவரை நேற்று முன்தினம் (01) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்தோடு தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நீண்ட நேரம் கலந்துரையாடியது.

இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்படி தெரிவித்தார்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடனேயே குபேரர்களுக்கு வழங்கப்பட்ட வரிச்சலுகையினால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்ததாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இவ்வாறு வரிச்சலுகை பெற்ற செல்வந்தர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அது தொடர்பாக அதிசயமாக பேசியதாகவும் குறிப்பிட்டார்.

இன்று உண்மை வென்று வருவதாகவும், உண்மையை வென்றெடுப்பதற்கு மக்கள் கஷ்டப்பட வேண்டியுள்ளமை துரதிஷ்டவசமானது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சுதேச மருத்துவமும் பாரம்பரிய மருத்துவமும் காலம் காலமாக நம் நாட்டில் மதிப்புமிக்க தொழிலாக இருந்து வருகின்றன. இந்தத் தொழிலை பாதுகாக்கவேண்டிய கடப்பாடு அரசுக்கு இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

## 02.06.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 141 2267 | 152 6021 |
| கனேடியன் டொலர் | 167 6730 | 18 061 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 5168 | 43 8 20 |
| யூரோ | 268 4552 | 28 2515 |
| ஜப்பான் யென் | 1 610 | 1 718 |
| சிங்கப்பூர் டொலர் | 146 7321 | 155 7650 |
| ஸ்ரேலிங் பவுன் | 330 83 | 346 287 |
| சுவிஸ் பிரான்ங் | 256 244 | 270 17 2 |
| ஐ.அ.டொலர் | 244 5008 | 254 4771 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 845 35 5 |
| குவைட் | குவைட் தினார் | 0,066 3583 |
| ஓமான் | ஓமான் றியால் | 825 5001 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 6726 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 0335 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 0634 |

# ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடன் கல்வியமைச்சர் பேச்சுவார்த்தை

(கல்லடி நிருபர்)

கல்வித்துறையில் தற்போது எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுக்கும் ஆசிரியர் சங்கத் தலைவர்களுக்குமிடையிலான சந்திப்பு கல்வியமைச்சில் நேற்று முன்தினம் (01) இடம்பெற்றதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளரும், மட்டக்களப்பு மாவட்ட பொதுச்செயலாளருமான பொன்னுத்துரை உதயரூபன் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஆசிரியர் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி யல்வெல பன்னசேகர தேரர், ஜோசப் ஸ்டாலின், மஹிந்த ஜயசிங்க மற்றும் ஜகத் ஆனந்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது சம்பள அதிகரிப்பு தொடர்பான உபகுழுவின் பரிந்துரைகளை 6 மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்துவதற்கான உடன்படிக்கையை அமைச்சு ஏற்கனவே மீறியுள்ள நிலையில், அதனை விரைவில் நடைமுறைப்படுத்தல், சம்பள அதிகரிப்புக்கு மேலதிகமாக அதிபர் சேவையிலுள்ள சம்பள முரண்பாடுகள், அதிபர்கள் சேவையில் ஆசிரியர்களை உள்வாங்குவதால் ஏற்படும் சம்பள முரண்பாடுகள், திறன் மேம்பாட்டு பயிற்சி தொடர்பிலான பிரச்சினைகள் போன்ற அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் பிரச்சினைகள், 1999ஆம் ஆண்டு நியமனம் பெற்ற அதிபர்களின் பதவியுயர்வுப் பிரச்சினைகளைத் தீர்த்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு புதிய பாடசாலை தவணை எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் போக்குவரத்துப் பிரச்சினைகள் தீவிரமாகக் காணப்படுவதால் அதற்கான தீர்வுகள், பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கான கொடுப்பனவுகளை அதிகரித்தல் மற்றும் ,துவரை வழங்கப்படாத கொடுப்பனவுகளை உடன் வழங்குதல் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த விரைவில் அமைச்சரவையில் இதற்கான பத்திரத்தைச் சமர்ப்பித்து, பணம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

அத்தோடு இவ்வாண்டு ஆசிரியர் இடமாற்றங்கள் கட்டாயமாக்கப்படும் என அமைச்சர் இதன்போது இணக்கம் தெரிவித்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சிறுநீரகம் தேவை



கொழும்பு நாலந்தா வித்தியாலயத்தின் (1985/86) முன்னாள் கிரிக்கெட் வீரரான அசங்க சேனாநாயக்க, மோசமான சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், விரைவில் அவருக்கு சிறுநீரகம் ஒன்றை பொருத்த வேண்டும். ஆகவே, ஏ பொசிட்டிவ் அல்லது நெகட்டிவ் அல்லது ஓ பொசிட்டிவ் அல்லது நெகட்டிவ் இரத்தமுடைய சிறுநீரகம் ஒன்றை விரைவில் பொருத்த வேண்டும் என விசேட வைத்தியர் சூலா ஹேரத் கூறினார்.

எனவே, சிறுநீரகம் ஒன்றை தியாகம் செய்வதற்கு யாரேனும் தயாராக இருந்தால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தை தொடர்புகொள்ளுங்கள்.

0718716755, 0768003580.

# இந்திய – இலங்கை பவுன்டேஷனின் 37ஆவது சபைக் கூட்டம் புதுடில்லியில்



இந்திய - இலங்கை பவுன்டேஷனின் 37ஆவது நிர்வாக சபைக் கூட்டம் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோரின் இணைத் தலைமையின் கீழ் அண்மையில் புதுடில்லியில் நடைபெற்றது. சபைக் கூட்டம் கலப்பு முறையில் நடைபெற்றது.

பொருளாதார, விஞ்ஞான, கல்வி, தொழில்நுட்ப மற்றும் கலாசார ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் இந்திய - இலங்கை உறவுகளை மேம்படுத்துதல் மற்றும் இரு நாட்டு மக்களிடையே அதிக புரிதலை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன், இந்தியா - இலங்கை பவுன்டேஷன் 1998 டிசம்பர் 28ஆம் திகதி இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் நிறுவப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்கள், தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் முன்னாள் செயலாளர்களான பேர்னாட் குணதிலக்க மற்றும் எச்.எம்.ஜி.எஸ். பலிஹக்கார இந்தக் கூட்டத்தில் மெய்நிகர் ரீதியாக கலந்துகொண்ட அதேவேளையில், இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர், ஜம்மு மத்திய பல்கலைக்கழகத்தின் வேந்தர் கோபாலசுவாமி பார்த்தசாரதி மற்றும் பவுன்டேஷனின் புதுடில்லி மற்றும் கொழும்பு செயலகங்களின் அதிகாரிகள் இரு இணைத் தலைவர்களுடன் கூட்டத்தில் பௌதீக ரீதியாக கலந்துகொண்டனர்.

இந்த ஆண்டு புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் கீழ் வரும் பவுன்டேஷனின் புதுடில்லி செயலகத்தால் சபைக் கூட்டம் நடத்தப்பட்டது. வருடாந்த சபைக் கூட்டங்கள் இரண்டு தலைநகரங்களிலும் மாறி மாறி நடத்தப்படுகின்றன.

இலங்கை மற்றும் இந்தியாவிலுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து 64 திட்ட முன்மொழிவுகள் இந்த பவுன்டேஷனுக்கு கிடைக்கப்பெற்றதுடன், அவற்றில் 22 திட்டங்களுக்கு சபை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தக் கூட்டத்தில் பவுன்டேஷனின் புதிய இணையத்தளமும் (www.islfcolombo.com) தொடங்கப்பட்டது.

# பரீட்சை எழுதிய மாணவி வீடு திரும்பவில்லை

(கெலும் குணதிலக்க)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவியொருவர் வீடு திரும்பவில்லையென குடாஓய பொலிஸ் நிலையத்தில் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிலிவெவ பகுதியைச் சேர்ந்த மாணவியொருவரே இவ்வாறு காணாமல்போயுள்ளார். கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் இறுதிநாளான நேற்றுமுன்தினம் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அவர் வீட்டிலிருந்து சென்றுள்ளார்.

இந்நிலையில், பரீட்சை எழுதிய பின்னர் அவர் வீட்டுக்குத் திரும்பவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் குடா ஓய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ஏ.சி.பிரசாத் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# தர்காநகர் முஸ்லிம் மகளிர் பாடசாலையில் கலாசார மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டும் விழா

(பீ.எம். முக்தார்)





களுத்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட தர்காநகர் அளுத்கம வீதி முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலையில் அமைக்கப்படவுள்ள கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் அதிபர் முஹம்மத் பாயிஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாக தர்காநகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டிவைத்தார்.

களுத்துறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா அமைப்பின் செயலாளரும் மேற்படி பாடசாலையில் உதவி அதிபருமான அஷ்ஷெய்க் பர்ஹான் ஹனீபா (நளீமி)யின் முயற்சியினால் தர்காநகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் இந்த கலாசார மண்டபத்தை அமைக்க முன்வந்துள்ளார். இதற்கு செலவாகும் தொகை



6 மில்லியன் ரூபாவாகும்.

இக்கலாசார மண்டபம் அமைக்கப்படுவதன் மூலம் பாடசாலையில் கற்கும் மாணவிகளுக்கு உரிய நேரத்தில் தொழுகையை மேற்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்.

தர்காநகர் பிரதேசத்தினதும் குறிப்பாக, களுத்துறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களினதும் பல்வேறு சமய, சமூக, கல்வி பணிகளுக்காக தர்காநகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் மேற்கொள்ளும் சேவைகளை பலரும் நிகழ்வில் பாராட்டிப் பேசினர்.

நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# டயலொக் நிறுவனம், தெற்காசியாவில் முதல் முறையாக 'மெட்டாவர்ஸ்' மூலம் Google I/O Extended Sri Lanka நிகழ்வை வழங்கியது




இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி நிறுவனம், Ideamart, Innovation Foundry மற்றும் இலங்கையின் Google Developer Group ஆகியவற்றுடன் இணைந்து தெற்காசியாவில் முதல் தடவையாக மெட்டாவர்ஸ் (metaverse) ஊடாக 'Google I/O Extended Sri Lanka 2022' எனும் நிகழ்வினை மே மாதம் 28ஆம் திகதியன்று நடத்தியது. இது மே மாதம் 11ஆம் திகதி முடிவடைந்த சர்வதேச 'Google I/O 2022' செயற்றிட்டத்துடன் தொடர்புடைய சமகால நிகழ்வாக இது நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2,00,000 பார்வையாளர்களை ஈர்த்திருந்த மேற்படி தனித்துவமான I/O Extended Sri Lanka 2022 நிகழ்ச்சியானது, நாடு முழுவதும் உள்ள அனைத்து தொழில்நுட்ப ஆர்வலர்களுக்கும் புதுமையான அறிவு பகிர்வு மற்றும் தொழில்நுட்ப பகிர்வு ஆகிய அனுபவங்களை வழங்கக்கூடியதாக அமைந்திருந்தது. இதில் பங்குகொண்டவர்கள் தமது கையடக்கத் தொலைபேசிகள், மடிக் கணினிகள் மற்றும் டெப்லெட்கள் மூலம் தமது வீடுகளில் இருந்தவாறே சௌகரியமாக இந்த 'Google I/O Extended Sri Lanka 2022' இல் இணைந்து கொள்ளக்கூடியதாக இருந்ததுடன், டயலொக் டெலிவிஷன் சேனல்1 (Dialog Television Channel 1), டயலொக் உத்தியோகபூர்வ Facebook பக்கம் மற்றும் யூடியூப் (YouTube ) செனலின் ஊடாக இதனை லைவ் ஸ்ட்ரீமிங் (LIVE Streaming) அனுபவமாக பெறும் வாய்ப்பையும் அவர்களுக்கு வழங்கியது.



தெற்காசிய பிராந்தியத்தில் முதன்முறையாக நடத்தப்பட்ட இந்த "மெட்டாவர்ஸ்" (Metaverse) நிகழ்வை, இலங்கையில் சமூக ஊடகங்களில் மிகவும் பிரபலமான தொழில்நுட்ப பிரமுகர் சானுக்ஸ் ப்ரோ மற்றும் அஜ்மால் ஹுசைன் ஆகியோர் தொகுத்து வழங்கிய அதேவேளை, சமீபத்திய புதிய கண்டுபிடிப்புகள், இனிவரும் நாட்களில் வர்த்தக சந்தையில் அறிமுகப்படுத்துவதற்கு தயார்படுத்தப்படுகின்ற புதிய உற்பத்திகள் பற்றிய அறிமுகங்களும் செய்யப்பட்டது.

# மறைந்த முன்னாள் இராணுவ பதவிநிலைப் பிரதானி பாலரட்னராஜாவுக்கு இராணுவ மரியாதையுடன் இறுதிக்கிரியைகள்



இராணுவ பதவிநிலைப் பிரதானியாக பல வருடங்களுக்கு முன்னர் கடமையாற்றிய இலங்கை கவச வாகனப் படையணியின் மேஜர் ஜெனரல் (ஓய்வு) வை. பாலரட்னராஜா தனது 83ஆவது வயதில் சுகவீனம் காரணமாக வியாழக்கிழமை (29) காலமானார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கௌரவமிக்க குடும்பத்தில் 1939 ஜூலை 22ஆம் திகதி மூன்றாவது பிள்ளையாக பிறந்த இவர், தனது இடைநிலை கல்வியை புனித ஜோன் கல்லூரியில் தொடர்ந்ததோடு, பாடசாலை மாணவர் படையணிக் குழு சார்ஜன்ட் என்பது குறிப்பிடத்தக்கது.

1959 நவம்பர் 08ஆம் திகதி இராணுவத்தில் இணைந்துகொண்டார். தனது அடிப்படை அதிகாரி பயிலுனர் பயிற்சியை ஐக்கிய இராச்சியத்தின் ரோயல் இராணுவ எக்கடமியில் பெற்றுக்கொண்ட மேஜர் ஜெனரல் (ஓய்வு) வை. பாலரட்ன ராஜா, இரண்டாம் லெப்டினன்ட்டாக பதவி உயர்வுபெற்று 1961 டிசம்பர் 21ஆம் திகதி கவச வாகனப் படையணியில் இணைத்துக்கொள்ளப்பட்டார்.

தனது சிறந்த அர்ப்பணிப்பு சேவையின் மூலம் மேஜர் ஜெனரல் நிலைவரை உயர்வு பெற்றுக்கொண்ட அவர், 24ஆவது படைப் பிரிவின் தளபதி, யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதி, முதலாவது கவச வாகன பிரிகேட் தளபதி, 21ஆவது பிரிகேட் தளபதி, முதலாவது படைப்பிரிவு தளபதி, இலங்கை கவசப் படையணியின் படைத் தளபதி, இலங்கை இராணுவத் தொண்டர் படையணித் தளபதி மற்றும் இராணுவ பதவிநிலை பிரதானி உள்ளிட்ட பல முக்கியமான பதவிகளையும் வகித்துள்ளார்.

தனது சேவைக்காலத்தில் ஐக்கிய இராச்சியம் பொவிங்டன் ரோயல் கவச வாகனப் படையணி பயிற்சி நிலையத்தில் கவச வாகன இளம் அதிகாரிகள் பாடநெறி, இந்தியாவில் உயர் கவச வாகன அதிகாரிகள் பாடநெறி உள்ளிட்ட பல முக்கியமான பாடநெறிகளை தொடர்ந்துள்ள இவர், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கல்லூரியில் பட்டப்படிப்பையும் தொடர்ந்துள்ளார்.

இவரது அர்ப்பணிப்புமிக்க சேவைக்காக விசிஷ்ட சேவா விபூஷணய, உத்தம சேவா பதக்கம் உள்ளிட்ட பல பதக்கங்களால் அலங்கரிக்கப்பட்டார்.

அவரது இறுதிக்கிரியைகள் பூரண இராணுவ மரியாதையுடன் நேற்று வியாழக்கிழமை (2) மாலை கொழும்பு கனத்தை பொது மயானத்தில் நடைபெற்றது.

# ஹட்டனில் 23,350 குடும்பங்களுக்கு இந்திய நிவாரணத் திட்டத்தை பகிர்ந்தளிக்க தீர்மானம்





(க.கிஷாந்தன்)

இலங்கையில் பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ் நாட்டு மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ள நிலையில் குறித்த உலருணவுப் பொருட்கள் அனைத்து மாவட்ட மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, தமிழ்நாட்டு முதலமைச்சரால் அன்பளிப்பு செய்யப்பட்ட பொருட்கள் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட ரயில் மூலம் நேற்று (02) காலை ஹட்டனை வந்தடைந்தன.

ஹட்டன் - அம்பகமுவ பிரதேசசெயலகத்திற்குட்பட்ட பகுதிகளுக்கான தமிழக நிவாரணப் பொருட்கள் கொழும்பிலிருந்து ரயிலில் ஹட்டன் புகையிரத நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டு உடனடியாகவே விநியோகம் இடம்பெற்றன.

இந்த நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் 67 கிராம சேவகர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 23ஆயிரத்து 350 குடும்பங்களுக்கு வழங்குவதற்காக அரிசி தொகைகள் நேற்று காலை அம்பகமுவ பிரதேச செயலாளர் தலைமையிலான குழு ரயிலில் வந்த இந்த நிவாரணப் பொருட்களை பொறுப்பேற்று உடனடியாக மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கிராம சேவகரின் ஊடாக லொறிகளின் மூலம் இந்த அரிசி தொகைகள் அனுப்பப்பட்டன.

மேலும், கிராம சேவகர்களின் ஊடாக கொண்டு செல்லப்படும் உணவுப் பொருட்கள் எதிர்வரும் நாட்களில் பயனாளர்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிப்படையான வரிமுறைகளே தற்போதைய தேவையாகவுள்ளன

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.



(கண்டி நிருபர்)

மேடைகளில் அல்லது தொலைக்காட்சிக்கு முன் தோன்றி தனது மனக்கவலையை வெளிப்படுத்தும் அமைச்சர்கள் எமக்குத் தேவையில்லை. நாட்டை கொண்டு நடத்த மறைமுக வரிகளை கைவிட்டு வெளிப்படையான வரிகளை ஏற்படுத்தும் வழிமுறைகளை முன்வைக்கும் அமைச்சர்களே எமக்குத் தேவை என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று(02) இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று சில அமைச்சர்கள் மேடைகளில் தோன்றி தமது உள்ளக்குமுறல்களையும் மனக்கவலையையும் வெளிப்படுத்தி வருகின்றனர். இதனைச் சொல்ல நாம் அவர்களை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யவில்லை. நாட்டுக்கு நல்லதைச் செய்யவே அவர்களைத் தெரிவுசெய்தோம்.

இன்று வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் பின்பற்றப்படும் வரி முறைகளில் 99 சதவீதம் மறைமுக வரியாகவே உள்ளது. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். வெளிப்படையான வரிகளைச் செலுத்துவதில் ஒரு சிலறைத்தவிர மற்றவர்கள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் தப்பிக் கொள்கின்றனர். இதனை மாற்றியமைத்து வெளிப்படையான வரிகளை செலுத்தும் ஒரு சமூகத்தை உருவாக்க நாம் பாடுபட வேண்டும். அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதனையே முயற்சிக்க வேண்டும்.

வரி அறவிடுதல் என்பது மலருக்கு சேதம் ஏற்படாத வகையில் அமுதை மட்டும் உறிஞ்சி எடுப்பது போல் இருக்க வேண்டும். மலரைக் கசக்கிப்பிழிந்து அமுதை எடுப்பதில் பயன் இல்லை. இலங்கையில் அதிகமாக நேரடி வரிகளை செலுத்துவோர் தம்மை கசக்கி பிழிவதாகவே கருதுகின்றனர்.

எமது நாடு கடந்த காலங்களில் அரிசி மற்றும் தானிய உற்பத்தியில் தன்னிறைவு கண்டிருந்தது. இருப்பினும், இந்த அரசு முன்வைத்த இயற்கைப்பசளைத் திட்டம் காரணமாக அரிசியில் கண்ட தன்னிறைவு இன்று இல்லாமல் ஆக்கப்பட்டு விட்டது.

எனவே, இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமாயின் பொதுமக்களதும் சர்வதேசத்தினதும் நம்பிக்கையை வென்ற ஒரு அரசு ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கு உடனடியாக ஒரு தேர்தலை நடத்தி மக்கள் மனதை வென்ற ஓர் பிரிவினரைத் தெரிவு செய்ய வேண்டுமே ஒழிய தற்போதுள்ள 225 பேரையும் மாற்றி மாற்றி அமைச்சுப் பதவிகளை வழங்கி அந்த எதிர்பார்ப்பை அடைய முடியாது என்றார்.

# வீதியை கடக்க முயற்சித்தவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு பலி



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

கடும் மழை காரணமாக குருவிட்ட கோனபிட்டிய வீதி நீரால் மூடியிருந்த நிலையில் அதனைக் கடந்து செல்ல முயற்சித்த குடும்பஸ்தர் ஒருவர் நீரலையில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் நேற்றுமுன் தினம்(01) வெள்ளம் குறைந்த பின்னர் புதர்களுக்குள் சிக்கியிருந்த போது பிரதேச மக்கள் மற்றும் மீட்புப்பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளது. வெள்ளத்தினால் இந்த வீதியில் நீர் நிறைந்திருந்து அவதான நிலையில் இருந்தபோதும் ஏனையவர்களின் அறிவுரைகளையும் ஏற்காது அவர் பயணித்த மோட்டார் சைக்கிளை பக்கத்தில் நிறுத்திவிட்டு வீதியைக்கடக்க முயற்சித்தபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாகவும் இவரது மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட் டிருந்த இடத்திலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் இருந்து இவரது சடலம் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிரியெல்ல பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய 41 வயதான அரச ஊழியரான இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

# 10 ஆயிரம் கிலோ தேயிலைத்தூளை ஏற்றிச்சென்ற லொறி குடைசாய்ந்தது

10ஆயிரம் கிலோ தேயிலைத்தூளை ஏற்றிச் சென்ற லொறியொன்று, வீதியில் குடை சாய்ந்ததால், ஹட்டன்- போடைஸ் வீதியுடனான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

அல்பியன் தோட்டத்திலிருந்து கொழும்பு ஏல விற்பனை சந்தைக்கு தேயிலைத் தூளை ஏற்றிச்சென்ற லொறி, அல்பியன் பகுதியில் மற்றுமொரு வாகனம் முன்னால் பயணிக்க இடம்கொடுக்க முற்பட்டபோதே, இவ்வாறு குடைசாய்ந்துள்ளது. இவ்சம்பவம் நேற்று(2) அதிகாலை இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



இச்சம்பவத்தினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என தெரிவித்துள்ள அக்கரப்பத்தனை பொலிஸார், லொறி விபத்துக்குள்ளான இடமானது, இலகு ரக வாகனங்கள் மாத்திரம் பயணிக்கும் பகுதி என்றும் தெரிவித்துள்ளனர்.

# மழை காரணமாக கண்டியில் 50பேர் பாதிப்பு

(கண்டி நிருபர்)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் மழையுடனான காலநிலையினால் கண்டி மாவட்டத்தில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்தநிலை தொடர்பான நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்டவர்கள் அவ்வப்பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு தேவையான வசதிகளை குறிப்பிட்ட பிரதேச செயலகங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேற்படி விடயங்களை மாவட்ட செயலகம் வழிநடத்துவதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு நிகழ்வுகள்

(பதுளை நிருபர்)

கரிட்டாஸ் நிறுவன அனுசரணையுடன் செடெக் மற்றும் உஸ்கொட் நிறுவனங்களின் ஏற்பாட்டில் பதுளை மற்றும் நுவரெலியா மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கான 'இலங்கை பெருந்தோட்ட சமூகம் குறித்த தகவல் பரிமாற்ற செயலமர்வு' நுவரெலியா கத்தோலிக்க திருச்சபை கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் (01) நடைபெற்றது.

இதன்போது யாழ். பொதுநூலக தீ வைப்பின் 41 வருட பூர்த்தி நினைவு கூரப்பட்டது.

மேலும், நிகழ்வில் அருட்தந்தை மைக்கல் இராஜேந்திரம், அருட்தந்தை மெத்திவ், வளவாளர் எம். திலகராஜ் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.



# பொருட்களை அதிக விலைக்கு விற்பனைசெய்வோரிடம் கொள்வனவு செய்வதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும்

## யாழ். அரச அதிபர் வேண்டுகோள்



(யாழ். நிருபர்)

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் பொருட்களை பதுக்கிவைத்து அதிக விலைக்கு விற்பனை செய்பவரிடம் பொதுமக்கள் கொள்வனவு செய்வதை தவிர்க்க வேண்டும் - என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (01) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது நாடு முழுவதிலும் பதுக்கிவைக்கப்பட்டுள்ள எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை அதிக விலைக்கு விற்றல் தொடர்பில் பாவனையாளர் அதிகாரசபையினர் மற்றும் பொலிஸார் இணைந்து சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு கைது சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

அதேபோல் யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வாரம் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எனவே, தற்போதைய சூழ்நிலையை பயன்படுத்தி சிலர் பொருட்களை அதிகளவில் கொள்வனவுசெய்து பதுக்கிவைத்து அதிக விலைக்கு விற்பனை செய்யக்கூடும். எனவே, அவர்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பினை வழங்கக்கூடாது. அதாவது பதுக்கிவைத்து அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு பொதுமக்கள் உடந்தையாக இருக்கக்கூடாது. அவ்வாறு அவர்களிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்வதில் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும்.

மேலும், யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தேவையான எரிபொருளின் அளவு முன்னரை விட அதிகளவில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கிடைக்கின்றது. எனினும், மேலதிகமாக கிடைக்கும் எரிபொருள் எங்கே செல்கின்றது என்பது தெரியவில்லை. மண்ணெண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகம் தற்போது பிரச்சினையாக காணப்படுகின்றது. அதற்குரிய தீர்வு விரைவில் கிடைக்கும் – என்றார்.

# தமிழக அரசின் 22,550 நிவாரணப் பொதிகள் வவுனியாவை வந்தடைந்தன





(வவுனியா நிருபர்)

பொருளாதார நெருக்கடியால் சிக்கியுள்ள இலங்கையர்களுக்கு இந்தியாவின் தமிழக அரசால் வழங்கப்பட்ட 22,550 அரிசி பொதிகளும் 750 பால்மா பொதிகளும் நேற்று (02) காலை வவுனியாவை வந்தடைந்தன.

விசேட புகையிரதம் மூலம் வவுனியாவை வந்தடைந்த நிவாரணப் பொதிகளை வவுனியா புகையிரத நிலைய அத்தியட்சகர் மாவட்ட செயலக அதிகாரிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியையடுத்து, இலங்கை மக்களுக்காக தமிழக அரசால் அரிசி, பால்மா உள்ளடங்கிய நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் வடமாகாணத்தின் வவுனியா மாவட்டத்திற்கு 22,550 அரிசி மற்றும் 750 பால்மா பொதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அதற்கான நிவாரணப் பொதிகள் வவுனியாவை வந்தடைந்த நிலையில், அதனை மாவட்ட செயலக அதிகாரிகள் பொறுப்பேற்று பிரதேச செயலாளர்களிடம் கையளித்தனர்.

அந்தவகையில், வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்கு 12,315 அரிசி, 452 பால்மா பொதிகளும், செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவுக்கு 4,675 அரிசி மற்றும் 148 பால்மா பொதிகளும், வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்கு 3,560 அரிசி, 116 பால்மா பொதிகளும், வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவுக்கு 2,000 அரிசி, 34 பால்மா பொதிகளும் வழங்கப்பட்டுள்ளன. அவை கிராம அலுவலர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக கிராம மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

# விலங்கு தடுப்பு மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

## கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துமாறு அங்கஜன் எம்.பி. பணிப்புரை



(சாவகச்சேரி நிருபர்)

யாழ். மாவட்டத்திலுள்ள வைத்தியசாலை களில் விலங்கு விசர் நாய் தடுப்பு மருந்து உள்ளிட்ட மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் உடனடியாக உள்ளூராட்சி மன்றங்கள் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் துறைசார் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (01) நெருக்கடியான காலகட்டத்தில் வைத்தியதுறை எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக இடம்பெற்ற இணையவழிக் கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

நாட்டில் விலங்கு விசர் நாய் தடுப்பூசி உள்ளிட்ட மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே, உள்ளூராட்சி சபைகள் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு கட்டுப்படுத்தாவிட்டால் அதன் காரணமாக ஏற்படும் மரணங்கள் அதிகரித்துவிடும். இது தொடர்பாக அரசாங்க அதிபர் ஆளுநருடன் கலந்துரையாடி உள்ளூராட்சி சபைகள் ஊடாக கட்டாக்காலிகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

குறித்த இணையவழிக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மகேசன், திட்டமிடல் வைத்திய அதிகாரி மோகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு யாழ். மாவட்ட வைத்தியதுறை எதிர்நோக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்தனர்.

# காணாமல்போன நிலையில் மீட்கப்பட்ட 3 வயது சிறுமி வைத்தியசாலையில் அனுமதி

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவில் வடக்கு பகுதியில் நேற்று முன்தினம் (01) பிற்பகல் காணாமல்போன நிலையில் மீட்கப்பட்ட 3 வயதுச் சிறுமி சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

மிருசுவில் வடக்கு பகுதியைச் சேர்ந்த 3 வயதான கபிலன் அபிஷா என்ற மூன்று வயதுச் சிறுமி புதன்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் தனது வீட்டிலிருந்து மர்மமான முறையில் காணாமல்போயிருந்தார்.

இந்நிலையில் பிரதேச மக்கள், பாதுகாப்புத் தரப்பினர் இணைந்து நடத்திய தேடுதலில் சுமார் 3 கிலோமீற்றர் தொலைவிலுள்ள அயல் கிராமமான வரணி, மாசேரி பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் அமைந்துள்ள ஆலயமொன்றிலிருந்து இரவு 10 மணியளவில் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட சிறுமியின் உடலில் சிறு கீறல் காயங்கள், முள் குத்திய காயங்கள் காணப்பட்ட நிலையில், சிறுமி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இருப்பினும், சிறுமி தனது வீட்டிலிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஆலயத்திற்கு எவ்வாறு சென்றார் என்பது இதுவரை தெரியவரவில்லை.

நாட்டில் அண்மைக்காலமாக சிறுவர் துஷ்பிரயோகங்கள், கடத்தல் ஆகிய வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படும் நிலையில், இச்சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் மருந்துப் பற்றாக்குறையை விரைவில் தீர்க்க இந்தியக் கடனுதவி உள்ளிட்டவற்றைப் பயன்படுத்தவும்

## கோப் தலைவர் சரித்த ஹேரத் பரிந்துரை





இந்தியக் கடனுதவி மற்றும் ஏனைய கடனுதவிகளைப் பயன்படுத்தி நாட்டிலுள்ள மருந்துப் பற்றாக்குறையை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த ஹேரத் பரிந்துரை வழங்கினார்.

2022ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி வரையில் அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துப் பற்றாக்குறை குறித்தும், அதனை நீக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் ஆராய்வதற்கும் இலங்கை அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை கோப் குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தபோதே அவர் இந்தப் பரிந்துரையை வழங்கினார்.

இந்தியக் கடனுதவியில் 200 மில்லியன் டொலர் நிதியுதவி கிடைக்கப்பெற்றிருந்தாலும் 2022 ஏப்ரல் 22ஆம் திகதிவரையில் 55.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவ உபகரண வழங்கல்களுக்கு மாத்திரமே அமைச்சின் மருத்துவ உப குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்டிருந்ததாக கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். அது நிதியுதவியின் 28% எனவும், 2022 மே 18ஆம் திகதிவரை 92.2 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமான விலைப்பட்டியல் மாத்திரம் பரிந்துரை செய்யப்பட்டிருந்தமை குழுவின் தலைவரால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

நாட்டில் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் பற்றாக்குறையாக இருக்கும் சூழ்நிலையில் இந்த நிதியைப் பயன்படுத்தி தேவையான மருந்துகளை விரைவாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டினர்.

விசேடமாக அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் பற்றாக்குறை பொதுமக்களின் வாழ்க்கையுடன் தொடர்புபட்ட பிரச்சினை என்பதால் தற்போதைய நெருக்கடி நிலைமையை விரைவில் தீர்த்து அத்தியாவசிய மருந்துகளைப் பொதுமக்களுக்கு வழங்கும் அவசியத்தை குழுவின் தலைவர் வலியுறுத்தினார். அதற்கமைய, அந்த நிதியைப் பயன்படுத்தி தேவையான மருந்துப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்குப் பரிந்துரை வழங்கினார்.

இது தொடர்பான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தற்பொழுது அது இறுதிக்கட்டத்தில் இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். அதற்கமைய அத்தியாவசிய மருந்துகளை இந்த நிதியினூடாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் குறிப்பிட்டனர். விசேடமாக அமைச்சர்கள் சிலர் இந்தக் காலப்பகுதியில் நியமிக்கப்பட்டமையாலும் இந்தப் பணிகள் தாமதமடைந்ததாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்தியக் கடனுதவிக்கு மேலதிகமாக மருந்துப் பொருட்கள் பெற்றுக்கொள்வதற்குக் கிடைத்துள்ள உலக வங்கிக் கடன் (WB), உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவி (WHO), ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி (ADB) மற்றும் ஏனைய நன்கொடையாளர்களிடமிருந்து கிடைத்துள்ள உதவிகளை விரைவாகப் பயன்படுத்தாமை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. விசேடமாக இந்தியக் கடனுதவி உள்ளிட்ட இந்த அனைத்து உதவிகளும் 330 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகம் எனவும் அவை இதுவரை செலவுசெய்யப்படவில்லை என்பதும் இங்கு புலப்பட்டது. விரைவில் நிர்வாகத் தீர்மானங்கள் மற்றும் அனுமதியைப் பெற்று இந்த நிதியைப் பயன்படுத்தி மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்தால் 2023ஆம் ஆண்டின் நடுப்பகுதிவரை மருந்துப் பற்றாக்குறை ஏற்படாது என வருகை தந்திருந்த உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் கவனம் செலுத்திய கோப் தலைவர், மருந்துப் பற்றாக்குறையை நீக்குவதற்கு கிடைக்கப்பெற்றுள்ள அமெரிக்க டொலர் நிதியை சரியாக முகாமைத்துவம் செய்து விரைவாகப் பயன்படுத்தவில்லை எனத் தெரிவித்தார்.

அதனால் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு டொலர் தட்டுப்பாடு இருக்கவில்லை என்றும் முகாமைத் துவம் செய்வதில் விரைவாக அதனை மேற்கொள் ளாமை தொடர்பில் சிக்கலொன்றை அவதானிப் பதாகவும் கோப் தலைவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று, மருந்துகளைக் கொள்வனவு செய்யும்போது ரூபா தட்டுப்பாடு இருந்ததாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இதன்போது ஒன்லைன் ஊடாக நிதி அமைச்சின் செயலாளரும் குழுவில் பங்குபற்றி அது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், விரைவாக அதனைத் தீர்த்துக்கொள்வதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

மருத்துவ வழங்கல்களை நிர்வகிப்பதற்காக அமைக்கப்பட்ட கணினிக் கட்டமைப்பு உரிய முறையில் இற்றைப்படுத்தாமை மற்றும் பயன்படுத்தாமை தொடர்பிலும் கோப் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. இந்தக் கட்டமைப்பை உருவாக்கும் நிறுவனத்துக்கு சுமார் 645 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளமையும் அதன் பராமரிப்புக்கு 5 மில்லியன் ரூபா வழங்குகின்றமையும் இதன்போது புலப்பட்டதுடன், எனினும், அந்தக் கட்டமைப்பு முறையாகச் செயற்படவில்லை என்பதும் புலப்பட்டது.

இதனால் குறைந்த செலவில் புதிய கணினிக் கட்டமைப்பொன்றை உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் 80 வீதமான பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் வருகை தந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், நாட்டிலுள்ள மருந்துப் பொருட்களின் தேவையைக் கணக்கிடுவதற்கான வழிமுறைகள் குறித்து கவனம் செலுத்தியதுடன், அத்தகைய முறையொன்றை மிகவும் துல்லியமாகப் பேண வேண்டியதன் முக்கியத்துவத்தையும் கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இந்த முறையூடாக நாளாந்த மருந்துத் தேவை மற்றும் தட்டுப்பாட்டை முன்கூட்டியே கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனம், சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கற் பிரிவு மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை ஆகிய நிறுவனங்களின் கொள்வனவு முறை தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இந்த மூன்று நிறுவனங்களும் சேர்ந்து வினைத்திறனாக செயற்படுவதன் அவசியம் குறித்து கோப் தலைவர் வலியுறுத்தினார். இந்த நிறுவனங்கள் ஊடாக நாட்டின் மருந்துத் தேவைகளைக் கண்டறிதல் மற்றும் மருந்துகள் கொள்வனவுசெய்வது போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதால், இந்த நிறுவனங்கள் வினைத்திறனாக ஒன்றுடனொன்று தொடர்புபட்டு செயற்படுவது நாட்டுக்கு முக்கியமானது என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், இருதய நோய் தொடர்பான அத்தியாவசிய மருந்துகள், ரேபீஸ் நோய் தொடர்பான அத்தியாவசிய மருந்துகள், மயக்க மருந்துகள் மற்றும் ஒவ்வாமை தொடர்பான அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதில் ஏற்படும் தாமதம் மற்றும் அவ்வாறான அத்தியாவசிய மருந்துகளுக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய மருந்துகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. அதேபோன்று, 1990 அவசர சேவையில் காணப்படும் மருந்துப் பற்றாக்குறையை நீக்குவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, ரவுப் ஹக்கீம், பாட்டலி சம்பிக்க ரணவக்க, எரான் விக்ரமரத்ன, ஹர்ஷ டி. சில்வா, சரத் வீரசேகர, நாலக கொடஹேவா, மதுர விதானகே மற்றும் எஸ்.எம்.மரிக்கார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



வத்தளை ஹேக்கித்த ஸ்ரீ சபரிகிரீசன் ஐயப்ப சுவாமி தேவஸ்தானத்தின் 18ஆம் படி பிரதிஷ்டா பூஜை ஆலய புணருத்தாபன திருப்பணி ஆரம்பவிழா சுபகிருது வருடம் வைகாசி திங்கள் 18ஆம் நாள் புதன்கிழமை 01.06.2022 காலை 9.00 மணிமுதல் 11.00 மணி வரையுள்ள சுபவேளையில் விஸ்வ நாராயணக் குருக்களின் நல்லாசியுடன் அந்தணர் சிவாச்சார்யார் ஏற்பாட்டாளர் பிரம்மஸ்ரீ எஸ்.சிவநேசன் சர்மா குருக்களினால் இனிதே நடைபெற்று ஐயப்பனின் அருளால் அன்னதான பூஜைகளுடன் இன்றைய நிகழ்ச்சிகளுடன் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. (படங்கள்: ஏ.எஸ்.எம்.ஜாவித்)

## சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு 17ஆம் திகதி ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நேற்று முன்தினம் (01) நிறைவடைந்தது. இந்நிலையில், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இரண்டு கட்டங்களாக இடம்பெறவுள்ளன.

முதல் கட்டம் எதிர்வரும் 17ஆம் திகதியிலிருந்து 26ஆம் திகதிவரை நடைபெறும். இரண்டாம் கட்டம் எதிர்வரும் 30ஆம் திகதியிலிருந்து ஜூலை மாதம் 9ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடவுள்ள ஆசிரியர்களை தெளிவூட்டும் கருத்தரங்கு எதிர்வரும் 5ஆம் திகதியிலிருந்து 8ஆம் திகதிவரை இரண்டு கட்டங்களாக இடம்பெறும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

சவால்களுக்கு மத்தியில் இம்முறை கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையை வெற்றிகரமாக நடத்த முடிந்துள்ளது. பரீட்சைகள் பற்றி சில முறைப்பாடுகள் மாத்திரமே கிடைக்கப் பெற்றதாகவும் அவர் கூறினார். அந்த முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளார்.

## சிறுமியை துஷ்பிரயோகம் செய்த தந்தையொருவருக்கு 45 வருட சிறை

### இவ்வாறானவர்களுக்கு மன்னிப்பு கிடையாதென நீதிபதி தெரிவிப்பு

சிறுமியொருவரை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக கருதப்பட்ட இரு பிள்ளைகளின் தந்தைக்கு 45 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சிறுமியரை ஏமாற்றி பாலியல் தேவைகளுக்காக பயன்படுத்துவோருக்கு எவ்வித மன்னிப்பும் கிடையாதென மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க தீர்ப்பின்போது தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த 18 வருடங்களுக்கு முன்னர் சிறுமியொருவரை ஏமாற்றி இந்த நபர் துஷ்பிரயோகம் செய்துள்ளார். இது தொடர்பான வழக்கின் தீர்ப்பு நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

குற்றவாளிக்கு 45 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்த நீதிபதி 75 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 09 இலட்சம் பணமும் செலுத்துமாறு உத்தரவிட்டார்.



வரலாற்றுப் பிரசித்திபெற்ற பேருவளை மருதானை ஸாவியாவில் 155ஆவது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் தமாம் நிகழ்வு 31ஆம் திகதி கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம்.ரபீக் (பஹ்ஜி) தலைமையில் நடைபெற்றது. கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி அஸ்ஸெய்யித் அலவி மௌலானா (முர்ஸி) பங்குபற்றியோர் மத்தியில் உரையாற்றுவதை படங்களில் காணலாம். (படங்கள்: பேருவளை பீ.எம்.முக்தார்)

## 13 வயதான தங்கையை துஷ்பிரயோகம் செய்த 16 வயதுடைய அண்ணன் கைது

(கெலும் குணதிலக்க)

கொட்டியாகல பகுதியில் 13 வயதான தங்கையை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட் படுத்திய 16 வயதுடைய சகோதரனை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுமி கொட்டியாகல பகுதி பாடசாலையொன்றில் 06ஆம் தரத்தில் கல்வி பயில்வதுடன், சகோதரன் அதே பாடசாலையில் 11ஆம் தரத்தில் கல்வி பயில்வதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி கர்ப்பமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வயிற்றுவலி காரணமாக சியம்பலாண்டுவ வைத்தியசாலையில் சிறுமி சேர்க்கப்பட்டுள்ளார்.

அங்கு மேற்கொண்ட பரிசோதனையில் கர்ப்பமடைந்துள்ளமை தெரியவந்துள்ளது. அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சகோதரன் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக சிறுமி வாக்குமூலம் அளித்துள்ளார்.

அதன்பின்னர் சகோதரனை பொலிஸார் கைதுசெய்து சியம்பலாண்டுவ நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளனர். நீதவானின் உத்தரவின் அடிப்படையில் சிறுவனை நன்னடத்தை காப்பகத்தில் சேர்க்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். அத்துடன், சிறுமி மேலதிக சிகிச்சைகளுக்காக மொனராகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் எத்திமலே பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம். சஞ்சய தர்மதாச தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.


திகதி 01.06.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4773
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,750,070.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 2 2 4 9 5 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,729,016.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1251
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,438,940.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 9 6 7 4 7 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,439,055.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3015
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,658,020.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 52 53 54 63
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,356,225.36

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 803
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,984,660.00
வெற்றி இலக்கினம் P வெற்றி இலக்கங்கள் 14 16 26 53
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 112,648,944.80

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0082
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,291,800.00
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 07 42 44 62 விசேட இலக்கினம் மகரம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,646,243.00

கோடி 25 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1121
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,718,000.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 254,126,810.00
E 23 36 40 42 50
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk

# நிந்தவூரில் தொடர் கடலரிப்பினால் மீனவர் கட்டடம் சேதம்

## பாதுகாத்து தருமாறு கோரிக்கை




(பைஷல் இஸ்மாயில்)

அண்மைய நாட்களாக நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள தொடர் கடலரிப்பின் காரணமாக கடலோரத்தை அண்டிய கரையோரங்கள் பாதிக்கப்படுவதுடன், மீனவர்களின் வாடிகள், தென்னை மரங்கள் மற்றும் அவர்களின் பல்தேவைக் கட்டடங்களும் பாதிக்கப்பட்டு, நாளுக்குநாள் கடலால் அள்ளுண்டு போவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்த தொடர் கடலரிப்பின் காரணமாக மீனவர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், தங்களின் மீன்பிடி சம்பந்தமான விடயங்களை கலந்தாலோசித்துக்கொள்வதற்கும், அவற்றை சிறந்த முறையில் நிர்வகித்துக்கொள்வதற்கும் பல தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டு தற்பொழுது அவர்கள் நடு வீதிக்கு வரும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் தொடர் கடலரிப்பின் மூலமாக பல பாதிப்புகள் ஏற்பட்டிருந்த போதும், அது அரசியல்வாதிகள் மற்றும் அரச அலுவலகங்கள் மூலமாக சிறிது சிறிதாகவே நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருந்தது.

இவ்வாறிருக்கும் நிலையில், நிந்தவூர் 9ஆம் பிரிவு பிர்தௌஸ் ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள மீனவர்களுக்குச் சொந்தமான மீனவர் சங்கக் கட்டடம் தொடர் கடலரிப்புக் காரணமாக கடலால் காவு கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடமானது கடந்த சுனாமியின் பின்னர் வெளிநாட்டு தொண்டு நிறுவனம் ஒன்றினால் இலவசமாக வழங்கப்பட்டது. இங்கு மீனவர்கள் தங்களது மீனவர் சங்க செயற்பாடுகளை முன்னெடுத்து வந்ததுடன், அதன்பிறகு நிந்தவூர் ஒன்பதாம் பிரிவு சனசமூக நிலைய கட்டடமாகவும் இயங்கிவந்தது. இதில் மீனவர்களின் கூட்டங்கள், வேறு சங்கங்களின் கூட்டங்கள் மற்றும் இதர நிகழ்வுகள் என்பன நாள்தோறும் நடைபெற்று வந்ததுடன், இந்தக் கட்டடத்தின் மேல் மாடியில் இப்பகுதி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் என்பன பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும், இக்கட்டடத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு தற்காலிகமாக பொலிஸ் நிலையம் இயங்கிவந்ததுடன், தற்போது மீனவர் தேவையுடன் கூடிய இப்பிரதேச சனசமூக நிலையமாகவும் இயங்கி வருகின்றது.

இந்நிலையில், கட்டடத்தின் ஒரு பகுதி அண்மையில் ஏற்பட்ட தொடர் கடலரிப்பின் காரணமாக கடலால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. இன்னும் மீதமாக இருப்பது இந்த இரண்டு மாடி கட்டடத்தின் ஒரு பகுதி மட்டுமேயாகும். இதுவும் இன்னும் ஓரிரு வாரத்தில் கடலினால் அள்ளுண்டுபோகும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இருந்தபோதும், கடந்த காலத்தில் இக்கட்டடம் அமைந்துள்ள பிரதேசத்தில் ஏற்பட்ட கடலரிப்பைத் தடுப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் முயற்சியின் மூலம், கடலோர பாதுகாப்புத் திணைக்களத்தின் வழிகாட்டலுடன், தற்காலிகமாக மண்மூடைகள் நிரப்பப்பட்டு, பாதுகாக்கப்பட்டிருந்தாலும், கடல் அலைகளுக்கு அது தாக்குப்பிடிக்க முடியாமல் அள்ளுண்டுபோனது.

ஆனால், இந்தப் பகுதியில் அமைந்துள்ள இந்தக் கட்டடத்தை நிரந்தரமாக பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கைகளையும், நிந்தவூர் பிரதேச செயலகமோ அல்லது கரையோர பாதுகாப்புத் திணைக்களமோ அல்லது இப்பிரதேச அரசியல்வாதிகளோ எடுக்கவில்லை.

இவ்வாறான நிலை தொடர்ந்து செல்லுமானால் கடைசியில் கடற்கரை வீதியினூடாக பயணம் செய்ய முடியாததுர்ப்பாக்கிய நிலையும் நிந்தவூர் பிரதேசத்திற்கு ஏற்படும் என மக்கள் அஞ்சுகின்றனர்.

ஒலுவில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டதன் பிறகு, நிந்தவூர் பிரதேசத்தில் காணப்படுகின்ற அதிகமான கரையோரப் பிரதேசங்கள் கடல் அலையால் காவு கொள்ளப்பட்டு இந்த நிலங்கள் இருந்த அடையாளமே தெரியாமல் போய்விட்டது. இதில் இப்பிரதேச மக்களின் தென்னந்தோப்புகள், மீனவர்களின் மீனவவாடிகள் என இவை நீண்டுகொண்டே செல்கின்றன.

இருந்தபோதும், இந்தத் தொடர் கடலரிப்பினால் நிந்தவூர் றவாஹா பள்ளிவாசலுக்கு முன்னால் அமையப்பெற்றுள்ள பிரதேசமும் கடலரிப்பினால் பாதிக்கப்பட, அன்றிருந்த பிரதேச செயலாளர் ரி.எம்.எம்.அன்சாரின் முயற்சியின் விளைவாக, அதற்கு நிரந்தரமான தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டு தற்போது அது பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அடிக்கடி பல சிரமங்களை சந்திக்கும் நிந்தவூர் 9ஆம் பிரிவு மீனவர்களுக்கு நிரந்தர பாதுகாப்பு வசதிகளை இன்னும் நிந்தவூர் பிரதேச செயலகமோ, அரசியல்வாதிகளோ அல்லது கரையோர பாதுகாப்புத் திணைக்களமோ ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.

எனவே, நிந்தவூர் கடற்கரைப் பிரதேசத்தில் இருக்கும் வளங்களையாவது பாதுகாப்பதற்கு இவர்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்பதுடன், குறிப்பாக நிந்தவூர் ஒன்பதாம் பிரிவில் அமையப்பெற்றுள்ள இந்த மீனவர் சங்க கட்டடத்தைப் பாதுகாத்துத் தருமாறு இப்பிரதேச மீனவர்களும் பொதுமக்களும் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# நாட்டில் புகைப்பிடித்தல் அளவு 9.1 வீதமாக குறைவடைந்துள்ளது

## மட்டு. சுகாதார வைத்திய அதிகாரி சுகுணன்



(மட்டக்களப்பு நிருபர்)

எமது நாட்டில் 15 வீதமாக காணப்பட்ட புகைப்பிடித்தல் அளவு தற்போது 9.1 வீதமாக குறைவடைந்து மிகச்சிறந்த முன்னடைவை நோக்கிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இது தொடர்பாக விழிப்பூட்டும் விளம்பரப்பலகை ஒன்று பொதுமக்கள் பார்வையிடக்கூடிய இடத்தில் எமது பணிமனைக்கு வெளியாக திறந்துவைக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் இப்பிராந்தியம் புகையிலைப் பாவனைக்கு தடைசெய்யப்பட்ட பிரதேசமாக நிச்சயப்படுத்தப்பட இருக்கின்றது - என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய அதிகாரி ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

தேசிய புகையிலை அற்ற தினத்தை முன்னிட்டு வைத்திய அதிகாரி ஜீ.சுகுணன் தலைமையில் நடைபெற்ற விளம்பரப்பலகை காட்சிப்படுத்தல் திரைநீக்கம் செய்யும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. எமது நாட்டில் புற்றுநோய் மற்றும் சுவாசப்பை நோய்களை பெருமளவில் ஏற்படுத்தும் மிகப் பிரதான காரணிகளாக புகைப்பிடித்தலும் அதனுடன் இணைந்த புகையிலை சார்ந்தவற்றை உட்கொள்தலுமே காணப்படுகின்றன.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகின்ற 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட புகையிலை பாவனை அற்ற இடங்களை உருவாக்க மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கின்றனர். அந்த இடங்களில் புகையிலை பாவிப்பதோ, விற்பதோ அல்லது அது சம்பந்தப்பட்டவற்றை கையாள்வதோ நிறுத்தப்படும். இது மக்களுக்கு அறிவூட்டுவதிலிருந்து ஆரம்பித்து சட்ட நடவடிக்கைகள்வரை கையாண்டு பூர்த்தி செய்யப்படும் - என்றார்.

# இடமாற்றத்தை இரத்துச்செய்யக் கோரி கல்முனையில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்




(பெரியநீலாவணை நிருபர்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்கள் தமது இடமாற்றத்தை இரத்துச்செய்யக் கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

கல்முனை கல்வி வலயத்துக்கு முன்னால் நேற்று (02) ஒன்றுகூடிய ஆசிரியர்கள், தமது ஆசிரியர் இடமாற்றத்தை உடனடியாக இரத்துச்செய்யுமாறு கோரியே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய, கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட சுமார் 48 ஆசிரியர்களுக்கு வெளி வலய பாடசாலைகளுக்கு ஆசிரிய இடமாற்றக் கடிதம் கிடைத்துள்ளது. எனினும், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நெருக்கடியான பொருளாதார சூழலுக்குள் சுமார் 70 தொடக்கம் 100 கிலோமீற்றர்களுக்கு அப்பால் உள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்திருப்பது நியாயமற்றது என ஆசிரியர்கள் இதன்போது தெரிவித்தனர்.

கிழக்கு மாகாண பணிப்பாளரின் நீதி எங்கே, ஐம்பது வயதிலும் ஆசிரியர்களை அலைய வைக்காதே, நாட்டின் பொருளாதார நிலையை கருத்திற்கொண்டு ஆசிரியர் இடமாற்றத்தை இரத்துச் செய்க, ஆசிரியர்களை தலைகுனிய வைக்காதே, ஆசிரியர்களை அவமானப்படுத்தாதே போன்ற பல்வேறு சுலோகங்களை ஏந்தி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆசிரியர் இடமாற்றம் குறித்து மேன்முறையீடு செய்வதற்கான கால அவகாசமோ அல்லது ஆசிரியர்கள் தமது முறைப்பாட்டை முன்வைப்பதற்கான வேறு எந்த சந்தர்ப்பமோ வழங்கப்படாமல் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஆசிரியர் இடமாற்றம் இடமாற்ற நியமங்களுக்குப் புறம்பான விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதன்போது குற்றம் சுமத்தினர்.

இதன்பின்னர் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் வலயக்கல்விப் பணிப்பாளரிடம் செல்ல முற்பட்டனர். இதன்போது வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் குறிப்பிட்ட சில ஆசிரியர்களை மாத்திரம் அலுவலகத்துக்கு அழைத்து முறைப்பாட்டு மகஜரை பெற்றுக்கொண்டார். அதன்பின்னர் அங்கிருந்து ஆசிரியர்கள் கலைந்து சென்றனர்.

# காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்ச்சி உற்சவம்

(காரைதீவு நிருபர்)

கிழக்கிலங்கையில் வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்ச்சி உற்சவம் எதிர்வரும் 06ஆம் திகதி திங்கட்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகவுள்ளது. அதனை முன்னிட்டு அன்றையதினம் மாலை கடல் நீர் எடுத்துவரும் வழியில் கலியாணக்கால் வெட்டும் நிகழ்வாக மரபு முறைப்படி பூவரசு அல்லது வேம்பு மரக்கிளையை முறித்து ஊர்வலமாக ஆலயத்திற்கு கொண்டுவந்து முறித்துவரப்பட்ட பூவரச மரக்கிளைக்கு பல வர்ண சேலைகளால் அலங்கரித்து அதற்கு பூசை நடைபெற்று திருக்கதவு திறக்கப்படும்.

அதனைத்தொடர்ந்து ஏழு நாட்கள் பூசை நடைபெற்று எதிர்வரும் 13ஆம் திகதி பக்தர்கள் மடிப்பிச்சை சேகரிப்புக்கு ஊர்வலமாகச் சென்று மடிபிச்சை பெற்று அதன்மூலம் சேகரிக்கப்பட்ட நெல்லை மாலை 4.00 மணிக்கு பாரம்பரிய மரபுமுறையில் பொங்கலுக்கு நெற்குத்தும் வைபவம் நடைபெறும். 14ஆம் திகதி அதிகாலை 4.30 மணிக்கு திருக்குளிர்ச்சி பாடலுடன் விழா நிறைவடையும். மேலும், எட்டாம் சடங்கு 20ஆம் திகதி திங்கட்கிழமை மாலை கண்ணகை அம்மனுக்கு பொங்கல் பூஜை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனை வலய முதலாவது மாணவர் நாடாளுமன்ற அமர்வு

(நற்பிட்டிமுனை நிருபர்)

கல்முனை வலய முதலாவது மாணவர் நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 15ஆம் திகதி கல்முனை வலய நாடாளுமன்ற கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை மட்டத்திலிருந்து மாணவர்களுக்கு நாடாளுமன்ற சட்டத்திட்டங்கள், நடைமுறைகள் குறித்த விழிப்பூட்டல்களை ஏற்படுத்துவதை நோக்காகக்கொண்டு முன்னோடியாக ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டோரில் ஆணொருவரையும் பெண்ணொருவரையும் தெரிவுசெய்து எதிர்வரும் 8ஆம் திகதி இடம்பெறும் ஒத்திகை பார்த்தல் நியமனக் கடிதம் வழங்கும் கூட்டத்திற்கு அனுப்பிவைக்குமாறு முகாமைத்துவத்திற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எச்.பௌஸ் கேட்டுள்ளார்.

நிகழ்வின் வலய இணைப்பாளராக முகம்மட் மஹ்ரூப் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மானிய அடிப்படையில் உதவிகள் வழங்கும் நிகழ்வு



(பாறுக் ஷிஹான்)

கொரோனா அனர்த்தத்தில் தமது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு கடந்த காலங்களில் பாதிக்கப்பட்டிருந்த பெண்களுக்கான மானிய அடிப்படையில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரண்டினா (Berendina) நிறுவனத்தின் அனுசரணையில் நேற்று (02) கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்தின் 28 பயனாளிகள் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட இரண்டு பயனாளிகளுக்கு தலா 20 ஆயிரம் ரூபா மானிய அடிப்படையில் வழங்கப்பட்டது.

கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு கொடுப்பனவுகளை வழங்கினார். இதேவேளை, பிரண்டினா நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தில் ஏனைய பயனாளிகளுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் பி.பிரதிலிபன், மாவட்ட வியாபார



அபிவிருத்தி சேவைகள் ஒருங்கிணைப்பாளர் எஸ்.தினேஸ், கல்முனை கிளை முகாமையாளர் கே.கோபிகரன், வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஜெயரூபன், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் முன்னாள் பொறியியலாளர் நந்தகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# நாட்டு மக்களால் விரும்பப்பட்ட தலைவர்களே ஆட்சிசெய்ய வேண்டும்

## மட்டக்களப்பில் விழிப்புணர்வு பிரசாரத்தின்போது ஜே.வி.பியின் முன்னாள் எம்.பி. சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)



நாட்டைக் குட்டிசுவராக்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசும் வேண்டாம் மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்ரமசிங்கவின் பிரதமர் நிர்வாகமும் வேண்டாம் என மக்கள் சார்பாக தாங்கள் கோரிக்கை விடுப்பதாக மக்கள் விடுதலை முன்னணியினர் மட்டக்களப்பில் விழிப்புணர்வூட்டும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் ஜே.வி.பியின் பிரசாரகர்களும் அதன் ஏறாவூர் அமைப்பாளர் புஹாரி தலைமையிலான அணியினரும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை ஏறாவூர் நகர கடைத் தெருக்களில் மக்களை விழிப்புணர்வூட்டும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

வீதிகளில் கால்நடையாகச் சென்ற இக்குழுவினர் 'வளப்புமிக்க தேசம் அழகான வாழ்க்கை மற்றும் அன்புமிக்க மக்களே' என விளிக்கும் இரு கையேடுகளை மக்களுக்கு விநியோகித்தனர்.

அதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி,

"கோட்டா மற்றும் ரணில் தலைமையிலான நிர்வாகத்தினால் இந்த நாட்டுமக்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளை ஒருபோதும் தீர்த்துவிட முடியாது. அதனால் இவர்கள் ஒதுங்கிக்கொண்டு மக்களாட்சியை நிறுவுவதற்கு இடங்கொடுக்க வேண்டும். மக்களால் விரும்பப்பட்ட தலைவர்கள் ஆட்சி செய்யவேண்டும் என்பதே மக்கள் சார்பாக எமது கோரிக்கையாகும்.

இவர்கள் நிர்வாகப் பொறுப்பில் இருக்கும் வரை இந்த நாட்டுக்கு விமோசனம் இருக்காது. கொள்ளையடிக்கின்ற அரசாங்கத்துக்கு உதவி அளிக்க சர்வதேச நாடுகள் மற்றும் முதலீட்டாளர்கள் முன்வர வாய்ப்பில்லை. இவர்கள் மக்களால் வெறுக்கப்பட்ட மக்கள் நிராகரித்த தலைவர்கள்.

இவர்களால் மக்கள் தொடர்ந்தும் வதைப்பட முடியாது. கோட்டா ஆட்சிக்கு வரும்போது பருப்பு ஒரு கிலோ 65 ரூபா. இப்பொழுது 535 ரூபா, தேங்காயெண்ணெய் ஒரு போத்தல் 160 ரூபா இப்பொழுது 800 ரூபா. அன்று சீமெந்து ஒரு பக்கெற் 850 ரூபா இப்பொழுது 3,200 ரூபா. சமையல் எரிவாயு அன்று 1,400 ரூபா இப்பொழுது 5,200 ரூபா. பாண் ஒரு இறாத்தல் 50 ரூபா இப்பொழுது 160 ரூபா. விலைகளே அதிகரித்திருக்கின்றன. ஆனால் அன்று கோட்டா இருக்கும்போது கிடைத்த அதே சம்பளமும் அதைவிடக் குறைந்த வருமானமுமே மக்களுக்கு கிடைக்கின்றன. எனவே, இந்த நிலைமையை மாற்ற வேண்டும். அணி திரளுங்கள்" - என்றார்.

# பாண்டிருப்பில் இடம்பெற்ற திருஞானசம்பந்தர் குருபூசை






இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாண்டிருப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் மற்றும் இந்து இளைஞர் மன்றம் இணைந்து நடத்திய திருஞானசம்பந்தர் குருபூசை தினம் அண்மையில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

பாண்டிருப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அத்துடன், நடைபவனி பாண்டிருப்பு கலாசார மத்திய நிலையத்தை சென்றடைந்து அங்கு பாண்டிருப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய இந்து இளைஞர் மன்றத் தலைவர் க.சுதன் தலைமையில் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீஸன் மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் உட்பட பலர் அதிதியாக கலந்து சிறப்பித்தனர்.

# சுற்றாடலை அழிவின் விளிம்பிலிருந்து மீட்டு பாதுகாக்க முயற்சிக்கும் கரித்தாஸ் எஹெட்

(கல்லடி விசேட, மட்டக்களப்பு நிருபர்கள்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூக முன்னேற்றத்தின்பால் அதீத அக்கறையுடன் மாவட்ட மக்களுக்கு பல்வேறுபட்ட சமூக நலன்சார் விடயங்களை மக்களது காலடிக்கே தேடிச்சென்று உதவித்திட்டங்களை ஆற்றிவரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களில் ஒன்றாக மட்டக்களப்பு மாவட்ட கரித்தாஸ் எஹெட் நிறுவனமானது திகழ்ந்துவருகின்றது.

அந்தவகையில், எதிர்வரும் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உலக சுற்றாடல் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், அதனை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட கரித்தாஸ் எஹெட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பல்வேறுபட்ட சுற்றுச்சூழல் சுத்திகரிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 1.00 மணிவரையான காலப்பகுதிக்குள் மட்டக்களப்பு பெரிய உப்போடை மற்றும் சின்ன உப்போடை பகுதிகளிலுள்ள ஆற்றங்கரை பிரதேசத்தை அண்டிய பகுதிகளிலும் ஆற்றங்கரையோரங்களில் மீனவர்களின் மீன்பிடி செயற்பாடுகளுக்கு பங்கம் விளைவிக்கும்வண்ணம் அழுகிய நிலையில் தேங்கிக்கிடக்கும் ஆற்றுவாழை தாவரங்களையும் அகற்றி தூய்மைப்படுத்தி, குறித்த பகுதி மக்களுக்கு இதமான துர்நாற்றம் அற்றவொரு சூழலை அமைத்துக்கொடுக்கும் செயற்பாட்டையே சிரமதானத்தின் ஊடாக முன்னெடுக்கவுள்ளனர்.

தற்போதைய காலகட்டத்தில் சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் காரணிகள் அதிகரித்து வரும் நிலையில், அதிலும் குறிப்பாக, டெங்கு நுளம்பு பெருகக்கூடிய அபாய நிலையை தோற்றுவிக்கும்வண்ணம் பொதுமக்கள் அசமந்தப்போக்குடனும் செயற்பட்டு வருவதனால் மட்டக்களப்பு மாவட்டம் டெங்கு நோய் தொடர்பாக சிவப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இக்காலகட்டத்தில் அதற்கும் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், மட்டக்களப்பு மாவட்ட கரித்தாஸ் எஹெட் நிறுவனமானது சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் காரணிகளை இனங்கண்டு அப்பகுதிகளை துப்புரவு செய்யவுள்ளதுடன், மட்டக்களப்பிற்கு அழகு சேர்க்கும் வாவியின் கரையோரப் பகுதிகளையும் அழகுபடுத்தி சுகாதாரமான ஒரு சூழலை ஏற்படுத்திக்கொடுப்பதற்குமாக திட்டங்களை வகுத்துள்ளதுடன், மாவட்டத்தின் சுற்றாடலை அழிவின் விளிம்பிலிருந்து மீட்டு வளங்களை பாதுகாப்பதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட கரித்தாஸ் எஹெட் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்பணி ஏ.யேசுதாசன் அடிகளாரது ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படவுள்ள குறித்த தூய்மைப்படுத்தும் செயற்பாடானது, கரித்தாஸ் எஹெட் நிறுவனத்தின் சுற்றாடல் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் (SSE) கீழ் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், இதற்கான நிதிப்பங்களிப்பினை கரித்தாஸ் ஸ்ரீலங்கா தேசிய மத்திய நிலையத்தின் (SEDEC) ஏற்பாட்டில் Missereor நிறுவனம் வழங்கியுள்ளதுடன், சுகாதாரமான சூழலை உருவாக்க முன்னின்று செயற்பட்டு வருகின்றது.

# திருகோணமலையில் மரக்கறிகளின் விலையுயர்வால் மக்கள் பாதிப்பு: வர்த்தக நிலையங்களை மூடும் நிலை

(ரவ்பீக் பாயிஸ்)



நாட்டில் எரிபொருள் தட்டுப்பாட்டால் பாரிய பிரச்சினைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருவதுடன், இதன் விளைவாக மரக்கறிகளின் விலைகளும் பாரியளவில் அதிகரித்துள்ளதாகவும் வர்த்தக நிலையங்களை மூடும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் பலருக்கு பல வாரங்களாக டீசலைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் அதன் விளைவாக தமது உற்பத்திகளை பொருளாதார நிலையங்களுக்கு கொண்டு செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் மழைக்காலம் தொடங்கியுள்ள நிலையில், விவசாயிகள் தங்கள் உற்பத்திகளை உள்ளூர் சந்தைக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கின்றனர். மரக்கறிகள் மற்றும் பழங்களின் விலை உயர்வால் நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மரக்கறிகளின் விலை அதிகமாக இருப்பதால், வழக்கமான மரக்கறிகளை உணவில் சேர்ப்பதில் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர். இதனடிப்படையில், திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மரக்கறி கொள்வனவுக்காக பெரும்பாலான வர்த்தகர்கள் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தை நாடுவதுடன், இன்னும் சிலர் வடக்கு பிரதேசத்தில் மரக்கறிகள் கொள்வனவிற்காக சென்று வருவதாகவும் தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள டீசல் தட்டுப்பாடு காரணமாக நீண்டதூரம் பயணித்து இவ்வாறு மரக்கறிகளை கொள்வனவு செய்யமுடியாத நிலை காணப்படுவதாகவும், எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருந்து நிபந்தனைகளின் அடிப்படையில் சிறிய அளவிலான டீசல் மாத்திரமே விநியோகம் செய்யப்படுகின்றமையினால் இவ்வாறு தூரப் பிரதேசங்களுக்கு சென்று தமது மரக்கறி கொள்வனவில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதெனவும், தூரப் பிரதேசங்களிலிருந்து தமது மாவட்டத்திற்கு வருகை தந்து மரக்கறிகளை விநியோகிப்பதினால் மரக்கறிகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளதாகவும் இவ்வாறான அதிகரிப்பின் காரணமாக மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாமல் பழுதடைவதால் தாம் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்குவதாகவும் விரைவில் வர்த்தக நிலையங்களை மூடிவிட்டு வீடுகளுக்கு செல்லும் நிலை ஏற்படும் எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனடிப்படையில், கோவா 100-140, போஞ்சி 680-700, லீக்ஸ் 400-430, கரட் (நுவரெலியா) 520-550, வெள்ளரிக்காய் 150-180, உருளைக்கிழங்கு (நுவரெலியா) 280-300, பாகற்காய் 600-620, பூசணி (மலேசியன்) 160-180, கத்தரிக்காய் 320-350, முருங்கை 550-560 ரூபாவாக திருகோணமலை பிரதான பொது மரக்கறி சந்தையில் ஒருகிலோவுக்கான மரக்கறிகளின் விலைகள் காணப்பட்டன.

இவ்வாறான விலைகளில் விற்கப்படும் மரக்கறிகள் வாடிக்கையாளர்களினால் கொள்வனவு செய்யப்படாமல் மரக்கறிகள் பழுதடைந்து தாம் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்குவதாக திருகோணமலை நகரின் பொது மரக்கறி சந்தையின் வர்த்தகர்கள் தெரிவித்ததுடன், தமது வியாபாரத்தை முன்னெடுப்பதற்காக பிரதேச செயலகம் ஊடாக டீசல் பெறுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



எல்லாவரிகளும் மலைபோல ஏற்றி மக்கள குழிக்குள தள்ளிப்போட்டாங்களேடாப்பா முழுசா உப்புல இருந்து கொறுக்காப்புளி வரைக்கும் எல்லா சாமானையும் நரியும் காகமும் அரசாங்கம் கூட்டிப்போட்டாங்க எலுவா?

இனி சவப்பொட்டிகளுக்கு மட்டும்தான் வரி இல்ல. அதயும் ரணில் ஐயா கூட்டிப்போட்டுத்தான் விடுவாரு போல.

## 21ஆவது திருத்தம், ஜனாதிபதி முறைமை ஒழிப்பு:

# முஸ்லிம் தரப்புகள் ஒன்றிணைந்து தீர்க்கமான முடிவுகளை எடுக்க முன்வர வேண்டும்

## வலியுறுத்துகிறது கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி

(சாய்ந்தமருது நிருபர்)

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டம் மற்றும் ஜனாதிபதி முறைமை ஒழிப்பு போன்ற விடயங்களில் முஸ்லிம் அரசியல் தலைமைகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் புத்திஜீவிகள் உட்பட அனைத்து முஸ்லிம் தரப்புகளும் ஒன்றிணைந்து, கலந்துரையாடி தீர்க்கமான முடிவுகளை எடுக்க முன்வர வேண்டும் - என கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் முன்னணியின் செயலாளர் செயிட் ஆஷிப் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் கட்டமைப்பிலுள்ள குறைபாடுகளும் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 20ஐ ஒழித்து 19ஐ மையப்படுத்தி 21ஐ கொண்டுவருவது பற்றி அரசாங்க மட்டத்தில் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

இதில் முக்கிய அம்சமாக நடைமுறையிலுள்ள நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில், நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமை முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் வாதப்பிரதிவாதங்களும் இடம்பெற்று வருகின்றன.

இவ்விடயங்களில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் எதுவும் இதுவரை ஆக்கபூர்வமான கருத்துகளை வெளியிட்டதாகத் தெரியவில்லை. இவர்கள் தாம் சார்ந்திருக்கின்ற அரசியல் கூட்டணிகளின் தீர்மானங்களுடன் ஒத்துப்போகின்ற நிலைப்பாட்டிலேயே இருந்து வருகின்றனர். குறிப்பாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைமைகள், சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்மானத்தின் பின்னால் செல்வதற்கும் தேசிய காங்கிரஸ் தலைமையானது உதய கம்மன்பில, விமல் வீரவங்ச தலைமையிலான கூட்டணியின் முடிவுக்கேற்ப செயற்படவும் தயாராக இருக்கின்றனர்.

ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவியேற்ற பின்னர் அவருக்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்கிற விடயத்தில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற இந்த 03 முஸ்லிம் கட்சிகளும் தமது கூட்டணிக் கட்சிகளின் நிலைப்பாடுகளையே தமது கட்சிகளின் தீர்மானங்களாக எடுத்ததைபோன்றே இவ்விடயத்திலும் செயற்படுவார்கள் என்றே அறிய முடிகிறது.

தேசிய அரசியல் விவகாரங்களில் கட்சி மட்டத்திலும் சமூக மட்டத்திலும் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு இத்தலைமைகள் முன்வராமல் பின்னடிப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. முஸ்லிம் சமூகம் தொடர்பான தீர்மானங்களை அரசியல் தலைமைகள் பார்த்துக்கொள்ளட்டும் என்று விட்டு, சிவில் சமூக அமைப்புகளும் புத்திஜீவிகளும் ஒதுங்கி நிற்பார்களாயின், அது சமூகத்திற்கு பெரும் ஆபத்தையே கொண்டுவந்து சேர்க்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆகையால், அரசியலமைப்புத் திருத்தங்கள் மற்றும் ஜனாதிபதி முறைமை ஒழிப்பு போன்ற விடயங்களில் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் புத்திஜீவிகள் ஆலோசனைகளை முன்வைப்பதுடன், முஸ்லிம் அரசியல் தலைமைகளையும் அழைத்து ஒரு மேசையில் இருந்து கலந்துரையாடி, நாட்டினதும் சமூகத்தினதும் நலன் கருதிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்வர வேண்டும் என்ற அழைப்பை கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி விடுக்கிறது - என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# சாய்ந்தமருதில் 5,000 ரூபா நிவாரணக் கொடுப்பனவு



(சாய்ந்தமருது நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை நேற்று முன்தினம்(01) புதன்கிழமை ஆரம்பமானது.

பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.எம்.நஜீம், சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.றிபாயா உட்பட கிராம சேவகர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு 03 மாத காலத்திற்கு மாதாந்தம் 5,000 ரூபா நிவாரணக் கொடுப்பனவை வழங்கும் விசேட திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் 2,864 சமுர்த்திப் பயனாளிகளும் சமுர்த்தி உதவி பெறுவதற்காக காத்திருப்போர் பட்டியலிலுள்ள 1,161 பயனாளிகளுமாக மொத்தம் 4,025 குடும்பங்கள் இக்கொடுப்பனவை பெறத் தகுதிபெற்றிருப்பதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இக்கொடுப்பனவை வழங்குவதற்காக 2,002 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலகங்களிலுள்ள 43 சமுர்த்தி வங்கிகள் ஊடாக இக்கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. சதொச விற்பனை நிலையங்களில் பொருட்கள் இன்றி வாடிக்கையாளர்கள் சிரமம்

(கல்லடி, மண்முனை நிருபர்கள்)




மட்டக்களப்பு உட்பட கிழக்கு மாகாணத்திலுள்ள சதொச விற்பனை நிலையங்கள் பொருட்கள் இன்றி வெறிச்சோடிக் கிடக்கின்றன. இதனால் அந்நிலையங்களை நாடி பொருட்கள் வாங்க வரும் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதைக் காண முடிகின்றது.

சதொச விற்பனை நிலையங்களில் கடந்த சில நாட்களாக கையிருப்பிலுள்ள பொருட்கள் விற்றுத் தீர்ந்துகொண்டே வந்துகொண்டிருந்த நிலையில் இப்பொழுது பல சதொச விற்பனை நிலையங்கள் பொருட்கள் இல்லாது வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

தங்களுக்கு சதொச தலைமைக் களஞ்சிய சாலைகளிலிருந்து நீண்டநாட்களாக பொருட்கள் வந்து சேரவில்லை என சதொச விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏறகனவே சதொச விற்பனை நியைலங்களில் சீனி மற்றும் அரிசியை தனியே வாங்க முடியாத கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. அதனால் அத்தியாவசியமாக தமக்கு சீனியையும் அரிசியையும் வாங்க வரும் மக்கள் அத்தியாவசியமில்லாத பொருட்களையும் வாங்க வேண்டி வந்ததால் சதொச வில் இருந்த ஏனைய பொருட்களும் விற்றுத் தீர்ந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

இதன்காரணமாக இப்பொழுது பொருட்களை வாங்க முடியாது நிர்க்கதி நிலையை அடைந்துள்ளதாக பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# திருமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி:

## 125ஆவது ஆண்டு விழாவும் ஞாபகார்த்த முத்திரை வெளியீடும்







(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை மாவட்டத்தின் முதலாவது தேசிய பாடசாலையான திருகோணமலை இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவையொட்டி பாடசாலையின் அதிபர் செ.பத்மசீலன் தலைமையில் நேற்றுமுன்தினம் (01) ஞாபகார்த்த முத்திரை வெளியிடும் நிகழ்வு பாடசாலையின் ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு ஆன்மீக விருந்தினராக இராமகிருஷ்ணமிஷன் கொழும்புக் கிளையின் உப தலைவர் சுவாமி அக்ஷராவனந்தா, பிரதம விருந்தினராக கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.புள்ளநாயகம், சிறப்பு விருந்தினராக திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன், திருகோணமலை மாவட்ட பிராந்திய தபால் அத்தியட்சகர் சி. அருட்செல்வம் மற்றும் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும், கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவையொட்டி பல வேலைத்திட்டங்கள் முன்னெடுத்து வருவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கல்லூரியின் பிரதான வாயிலிலிருந்து ஆரம்பித்து கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் ஆரம்பப் பிரிவு பாடசாலை வரை சைக்கிள் ஓட்டப்போட்டி நடத்தப்பட்டதுடன், குறித்த போட்டியில் கல்லூரியின் மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பத்தினிபுர கிராமத்தில் நிலக்கடலை அறுவடை





(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பாலம்போட்டாறு பத்தினிபுர கிராமத்தில் நிலக்கடலை அறுவடை நிகழ்வு நேற்று (02) இடம்பெற்றது.

குறித்த அறுவடை நிகழ்வை தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.

சௌபாக்யா உற்பத்திக் கிராமம் மூலமாக தெரிவு செய்யப்பட்டு சௌபாக்யா சங்கம் மூலமாக நிலக்கடலை, நிலக்கடலை அல்வா போன்ற உற்பத்திப் பொருட்களும் இதன்போது சந்தைப் படுத்துவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்டன.

தற்போதைய நெருக்கடிக்கு மத்தியில் ஒவ்வொருவரும் தங்களது வீடுகளில் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டும். உணவுப் பற்றாக்குறை இல்லாதளவுக்கு ஒரு அங்குலமேனும் மரவள்ளி தடியையாவது நட வேண்டும் என பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி இதன்போது தெரிவித்தார்.

குறித்த இவ்வறுவடை நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், கணக்காளர் செல்வதாஸ் மற்றும் கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர், சௌபாக்யா நிலக்கடலை உற்பத்தியாளர்கள், தோட்டச் செய்கையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# இந்திய செய்திகள்

# இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்க சரியான தருணம்

## தே.மு.தி.க. மாவட்ட செயலர்கள் கூட்டத்தில் தீர்மானம்



"இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்டெடுக்க சரியான தருணம். எனவே, மத்திய அரசுக்கு உரிய அழுத்தத்தைக் கொடுத்து கச்சதீவை மீட்டெடுக்க வேண்டும்" என்று தே.மு.தி.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் மாவட்ட செயலாளர்கள் ஆலோனைக் கூட்டம் நேற்று கட்சியின் பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் சென்னை கோயம்பேட்டிலுள்ள தலைமைக் கழகத்தில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழக மீனவர்களுக்கு தொடர்ந்து உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும் மீனவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு தருவது, ஏற்கனவே இலங்கையிடமிருக்கும் படகுகளை மீட்டு எடுத்து தமிழக மீனவர்களிடம் ஒப்படைப்பது, இலங்கையிடமிருந்து கச்சதீவு மீட்டெடுக்க சரியான தருணம். எனவே, மத்திய அரசுக்கு உரிய அழுத்தத்தைக் கொடுத்து கச்சதீவை மீட்டெடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சோனியாவுக்கு கொரோனா



காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள சோனியா காந்தி, வீட்டில் தன்னை தனிமைப்படுத்திக்கொண்டுள்ளார்.

சோனியாவுக்கு கொரோனா உறுதி செய்யப்பட்ட நிலையில், லக்னோவுக்கு சென்ற அவரது மகள் பிரியங்கா காந்தி, தனது பயணத்தை இரத்துச்செய்துவிட்டு, டில்லி திரும்புவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சோனியா காந்தி இரண்டு தவணை கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்ட நிலையில் கொரோனா தொற்று பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

## ஆபத்தான முறையில் ஆற்றை கடந்து பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள்



அசாம் மாநிலத்தில் பாலம் இல்லாததால் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் ஆபத்தான முறையில் பிரம்மபுத்திராவின் கிளைநதியை படகில் கடந்து செல்கின்றனர்.

பக்சா, கச்சார், சிராங் உள்ளிட்ட 11 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவ-மாணவிகள் பாடசாலை செல்ல ஆற்றை கடந்து செல்ல வேண்டிய நிலையில், பாலம் இல்லாததால் மாணவர்கள் கடும் சிரமமடைந்து வருகின்றனர்.

ஆற்றைக் கடப்பதற்கு வசதியாக உடனடியாக பாலம் அமைக்க வேண்டும் என ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தன்னைத்தானே திருமணம் செய்துகொள்ளும் குஜராத் பெண்

### ஜூன் 9இல் மெஹந்தி; 11இல் திருமணம்; கோவாவில் ஹனிமூன்



இந்தியாவில் முதன்முறையாக குஜராத்தில் பெண்ணொருவர் தன்னைத்தானே ஜூன் 11ஆம் திகதி திருமணம் செய்துகொள்ளவுள்ளார்.

வதோரா குஜராத்திலுள்ள பரோடா பகுதியைச் சேர்ந்தவர் ஷாமா பிந்து (வயது 24 ). எம்.எஸ். பல்கலைக்கழகத்தில் சோஷியாலஜி பட்டம் பெற்றுள்ளார். தனியார் நிறுவனத்தில் பணியாற்றிவரும் ஷாமாவும் மற்றைய பெண்களைப்போலவே ஜூன் 11ஆம் திகதி நடைபெறவுள்ள தன்னுடைய திருமணத்துக்கும் தயாராகி வருகிறார்.

திருமணத்துக்கான பிரேத்தியேக ஆடை மற்றும் அனைத்து சம்பிராதாயங்களும் இவருடைய திருமணத்தில் நடைபெறவுள்ளன. இவருடைய திருமணத்தில் பங்கேற்க சில உறவினர்களையும் இவர் அழைத்துள்ளார். இந்தத் திருமணத்தில் மணமகன் மட்டுமே இல்லையே தவிர, மற்ற அனைத்து நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

பெண் ஒருவர் தன்னைத்தானே திருமணம் செய்துகொள்ளும் நிகழ்வு முதன்முறையாக குஜராத்தில் நடைபெறவுள்ளது. இதுகுறித்து ஷாமா பிந்து தெரிவிக்கையில்,

சிறு வயதிலிருந்தே திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்று நினைத்தேன். திருமணம் எனும் பாரம்பரியம் என்னைப் பெரிதாக ஈர்க்கவில்லை. ஆனால், நான் ஒரு மணமகளாக வேண்டும் என விரும்பினேன். அதனால், என்னை நானே மணந்துகொள்ள முடிவு செய்தேன். இது சோலோகேமி என அழைக்கப்படுகிறது.

ஒரு வெப்சீரிஸில் நடிகை ஒருவர், எல்லா பெண்களும் மணமகளாக விரும்புகிறார்களே தவிர, மனைவியாக அல்ல என பேசியிருப்பார். இதைக் கேட்டவுடன் என்னை நானே மணந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்கு மீண்டும் தோன்றியது. இதுபோன்று இந்தியப் பெண்கள் யாராவது திருமணம் செய்திருக்கிறார்களா என்று ஒன்லைனில் தேடிப் பார்த்தேன்.

ஆனால், யாரும் அப்படி செய்துகொள்ளவில்லை. திருமணத்தைப் புனிதமாகக் கருதும் இந்திய நாட்டில் தன்னைத்தானே திருமணம் செய்துகொள்ளும் முதல் பெண் நானாகத்தான் இருப்பேன் என நினைக்கிறேன். பெண்கள் தாங்கள் விரும்புபவரை திருமணம் செய்துகொள்வார்கள். இந்தத் திருமணம் மூலம் என்னை நானே காதலிக்கப் போகிறேன். என்னுடைய பெற்றோர் இந்தத் திருமணத்தை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களுக்கும் இதில் மகிழ்ச்சிதான். எனது மெஹந்தி நிகழ்ச்சி ஜூன் 9ஆம் திகதியும், திருமணம் ஜூன் 11ஆம் திகதி மாலை 5 மணிக்கும் நடைபெறவுள்ளது என்றார்.

திருமணம் முடிந்த பின்னர் இரண்டு வாரம் ஷாமா ஹனிமூனுக்கு கோவாவுக்கும் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய விடுதலைப் போராளி அஞ்சலை பொன்னுசாமி மறைவு

### பிரதமர் மோடி, தமிழக முதலமைச்சர் இரங்கல்



இந்திய விடுதலைப் போராளி அஞ்சலை பொன்னுசாமியின் மறைவுக்கு பிரதமர் மோடி, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

அஞ்சலை பொன்னுசாமியின் மறைவு வேதனையளிப்பதாக பிரதமர் மோடி ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

சுபாஷ் சந்திரபோஸின் இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சி ராணி படைப்பிரிவில் இணைந்து இந்திய விடுதலைக்காக போராடிய வீரமங்கையான அஞ்சலை பொன்னுசாமி அம்மாளின் தியாகம், இந்திய விடுதலை வரலாற்றில் என்றும் அழியாப் புகழ்பெற்று விளங்கும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள இரங்கல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## உலகின் உயரமான கட்டடத்தில் திரையிடப்பட்ட 'விக்ரம்' ட்ரைலர்



உலகின் உயரமான கட்டடமான புர்ஜ் கலிஃபாவில் 'விக்ரம்' படத்தின் ட்ரைலர் புதன்கிழமை இரவு திரையிடப்பட்டது.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் நடிகர் கமல்ஹாசன் நடிப்பில் உருவாகியுள்ள விக்ரம் திரைப்படம் ஜூன் 3ஆம் திகதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இப்படத்தில் விஜய் சேதுபதி, ஃபகத் பாசில், சூர்யா ஆகியோர் நடித்துள்ளதால் ரசிகர்களிடையே படத்திற்கான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

உலகம் முழுவதும் படத்தை விளம்பரப்படுத்தும் நோக்கில் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று படக்குழுவினர் செய்தியாளர்கள் சந்திப்பு மற்றும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகின்றனர்.

இந்நிலையில், உலகின் உயரமான கட்டடமான புர்ஜ் கலிஃபாவில் 'விக்ரம்' படத்தின் ட்ரைலர் நேற்றுமுன்தினம் இரவு 8.10 மணிக்கு திரையிடப்பட்டது.

இந்த நிகழ்வில் கமல்ஹாசனும் பங்கேற்றார்.

# திடீரென பழுதான ஏ.சி; விஷமாக மாறிய புகை

## ''ரொம்ப ஹொட்டாக இருக்கு'' - கே.கேயின் கடைசி வார்த்தை









மறைந்த பிரபல பின்னணிப் பாடகர் கிருஷ்ணகுமார் குன்னத்துக்கு நேற்று இறுதிச்சடங்கு நடைபெற்று மும்பையிலுள்ள வெர்சோவா தகன மையத்தில் கே.கேயின் உடல் தகனம் செய்யப்பட்டது.

பிரபல பின்னணிப் பாடகர் கே.கே. என அழைக்கப்படும் கிருஷ்ணகுமார் குன்னத் (வயது 53) மாரடைப்பு காரணமாக நேற்று முன்தினம் காலமானார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியின் போது உடல்நலக்குறைவு ஏற்பட்டு உடனடியாக அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் மாரடைப்பு காரணமாக இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இந்தியத் திரையுலகின் பல்துறைப் பாடகர்களில் ஒருவரான கேகே, ஹிந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் பெங்காலி உள்ளிட்ட பல மொழிகளில் பாடல்களைப் பதிவுசெய்துள்ளார்.

தமிழ் சினிமாவில் இவர் 66இற்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளார். அதில் ''காதல் வளர்த்தேன்...'' (மன்மதன்), ''அப்படி போடு...'' (கில்லி), ''காதலிக்கும் ஆசை...'' (செல்லமே), ''நினைத்து நினைத்து பார்த்தேன்...'' (7ஜி ரெயின்போ காலனி), ''உயிரின் உயிரே...'' (காக்க காக்க), ''ஸ்ட்ராபெர்ரி கண்ணே...'' (மின்சார கனவு), ''ஒல்லிக்குச்சி உடம்புக்காரி...'' (ரெட்) உள்ளிட்ட பாடல்கள் இதில் அடங்கும்.

***''உள்ளம் தெளிவாக வை எண்ணம் உயர்வாக வை***
***வாழும் காலம் எல்லாம் மண்ணில் மரியாதை வை***
***வேர்கள் இல்லாத மரமும் உண்டா சொந்தக்காலில் நீ நில்லேன்மா***
***நீ நின்னா பின்னாலே ஊரே கேட்கும் அதுக்குள் தம்பட்டம் கூடாதம்மா***
***கண் இமைக்கும் நொடியில் அட எதுவும் நடக்கும்***
***இது எனக்கு தெரியும் நாளை உனக்கும் புரியும்***
***ஹேய் அஞ்சுக்குள்ள நாலை வெய்***
***ஆளம் பார்த்து காலை வெய்..''*** சுப்பர் ஸ்டார் ரஜினியின் நடிப்பில் வெளியான சந்திரமுகி திரைப்படத்தில் வெளியான ''அண்ணனோட பாட்டு..'' என்ற பாடலில் கே.கே. பாடிய வரிகளை இவை. ''கண் இமைக்கும் நொடியில் அட எதுவும் நடக்கும். இது எனக்கு தெரியும் நாளை உனக்கும் புரியும்..'' என்ற வரிகள் அவருக்கே எழுதப்பட்டவை போன்று இருக்கின்றன என அவரது ரசிகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நேற்றுமுன்தினம் கொல்கத்தாவிலுள்ள ரவீந்திர சதனில் வைக்கப்பட்டிருந்த பாடகர் கே.கே. உடலுக்கு மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பெனர்ஜி நேரில் அஞ்சலி செலுத்தினார்.

கே.கே உடலுக்கு துப்பாக்கி குண்டுகள் முழங்க அரசு மரியாதை அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவரின் உடல் கொல்கத்தா விமான நிலையத்திலிருந்து நேற்றுமுன்தினம் இரவு மும்பை இல்லத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அவரின் உடலுக்கு காலை முதல் திரை பிரபலங்கள், அரசியல் பிரமுகர்கள், ரசிகர்கள் என பல்வேறு தரப்பினர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து, பகல் ஒரு மணியளவில் மும்பையிலுள்ள வெர்சோவா தகன மையத்தில் கே.கேயின் உடல் தகனம் செய்யப்பட்டது.



### ''ரொம்ப ஹொட்டாக இருக்கு''

கே.கே. என்று அழைக்கப்படும் பிரபல பாடகர் கிருஷ்ணகுமார் குன்னாத்தின் (வயது 53) திடீர் மறைவு, கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், அவரின் மறைவுக்கு பலவித காரணங்கள் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த இரு நாட்களாக கே.கே. கொல்கத்தாவில் தொடர்ந்து இசை நிகழ்ச்சி நடத்தி வந்துள்ளார். இந்நிலையில்தான் நேற்றுமுன்தினம் மேடையில் பாடிக்கொண்டிருக்கும்போதே உடல்நலக்குறைவு ஏற்பட்டதால், ஹோட்டல் அறைக்குத் திரும்பினார். பின்னர், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்தார். இயற்கைக்கு மாறான மரணம் என்று பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கொல்கத்தாவில் இசை நிகழ்ச்சி நடந்த Nazrul Manch அரங்கத்தில் 2,400 பேர் வரை அமர்ந்து நிகழ்ச்சிகளை காணலாம். ஆனால், கே.கேயின் இசை நிகழ்ச்சியை காண 7,000 பேர் கூடியுள்ளனர். அரங்கத்துக்கு வெளியேவும் ஏராளமான ரசிகர்கள் கூடியிருந்தனர். அந்த ரசிகர்கள் வெளியே நின்று கூச்சல் குழப்பத்தை ஏற்படுத்தினர். அரங்கத்தில் இருந்த இரு கதவுகளையும் உடைத்துள்ளனர்.

இதனால், அவர்களை கட்டுப்படுத்த தீயணைப்பான் புகையை பயன்படுத்தியுள்ளனர். தீயணைப்பானிலிருந்து வெளியான புகை உடைக்கப்பட்ட கதவுகள் வழியாக அரங்கத்துக்குள் சென்று உள்ளே இருப்பவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது. அதிக மக்கள் கூட்டம் இருக்கும் இடங்களில் தீயணைப்பானை பயன்படுத்தினால் histotoxic hypoxia என்று சொல்லப்படும் ஒரு நிலை மனிதர்களுக்கு ஏற்படலாம்.

அதாவது, இரத்தத்தில் ஒட்சிசன் அளவு குறைந்து இரத்த திசுக்கள் விஷமாக மாற வாய்ப்புள்ளது. அரங்கத்தில் ஏ.சியும் முறையாக வேலை செய்யாத நிலையில், கே.கே. மிகுந்த அசௌகர்யமாக காணப்பட்டார். நிகழ்ச்சியின்போது, ஒரு கட்டத்தில் பாடுவதை நிறுத்திய கே.கே. முகத்தை துணியால் துடைப்பதுபோலவும் எயார் கண்டிஷனை சுட்டிக் காட்டி, ''ரொம்ப ஹொட்டாக இருக்கிறது'' எனக் கூறுவது போன்ற வீடியோ காட்சிகள் பதிவாகியுள்ளன. ''உயிரின் உயிரே..'' பாடல் உள்ளிட்ட தமிழில் சூப்பர் ஹிட் பாடல்களை பாடிய கே.கே. பேசிய கடைசி வார்த்தை இதுதான்.

மேலும் கே.கேயின் முகத்திலும், தலையிலும் காயங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. கே.கேயின் மரணத்திற்கான காரணம் பிரேத பரிசோதனை அறிக்கை வந்த பிறகே தெரியவரும். இந்நிலையில் உடற்கூறாய்வு முடிந்ததும் பாடகர் கே.கேயின் உடல் கொல்கத்தா ரவீந்திர சதன் சதுக்கத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு கே.கேயின் குடும்பத்தினர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

# உலக செய்திகள்

## உலகம் முழுவதும் 44 இலட்சம் யூடியூப் சேனல்கள் நீக்கம்




உலகம் முழுவதும் 44 இலட்சத்துக்கும் அதிகமான யூடியூப் சேனல்களை நீக்கியுள்ளதாக யூடியூப் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்நிறுவனம் வெளியிட்டுள்ள சமூக வழிகாட்டுதல்கள் அமுலாக்கல் அறிக்கையில்,

சமூக விதிமுறைகளை மீறியதற்காகவும், ஸ்பேம் ரக வீடியோக்களை பதிவேற்றியதற்காகவும் இந்த ஆண்டு ஜனவரிமுதல் மார்ச் மாதம் வரையில் 44 இலட்சம் யூடியூப் சேனல்கள் தடைசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலும் 11 இலட்சம் வீடியோக்கள் அகற்றப்பட்டுள்ளன.

## வெடித்துச் சிதறும் மவுன்ட் எட்னா: பொங்கி வடியும் தீக்குழம்பு



இத்தாலியில் மவுண்ட் எட்னா எரிமலையிலிருந்து தீக்குழம்பு பொங்கி வழியும் வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன.

மீண்டும் குமுறத் தொடங்கிய எரிமலை, 3 ஆயிரத்து 300 மீற்றர் உயரத்திலிருந்து தீக்குழம்பை கக்கி வருகிறது. மத்தியதரைக்கடல் தீவான சிசிலியில் எரிமலையின் சாம்பல் கழிவு மற்றும் கரும் புகை சூழ்ந்து காணப்படுகின்றன.

எரிமலையின் 2,800 மீற்றர் தூரத்திலிருந்து வெளியேறும் எரிக்குழம்பை கிளோஸ் அப் வீடியோவாக பதிவுசெய்து புகைப்பட கலைஞர்கள் குழு வெளியிட்டுள்ளது.

## உக்ரைன் - ரஷ்யா போர்: சீனா அச்சுறுத்தல்; தாய்வானில் அதிகரிக்கும் துப்பாக்கி பயிற்சி



உக்ரைன் - ரஷ்யா போர், அண்டைநாடான சீனாவின் அச்சுறுத்தல் காரணமாக தாய்வானில் ஏராளமானோர் துப்பாக்கி சுடும் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

உக்ரைனில் போர் தொடங்கியதிலிருந்து துப்பாக்கி சுடும் பயிற்சி பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக போர் திறன் பயிற்சி நிறுவனத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

போரை விரும்பவில்லை என்று தெரிவிக்கும் அவர்கள் எதற்கும் தயாராக இருக்க பயிற்சி பெறுவதாக தெரிவித்துள்ளனர்

### அமெரிக்காவில் அதிகரிக்கும் துப்பாக்கி கலாசாரம்:

## ஒக்லஹோமா வைத்தியசாலையில் மர்மநபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் நால்வர் பலி



அமெரிக்காவில் வைத்தியசாலையொன்றில் மர்ம நபரொருவர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 4 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் ஒக்லஹோமா மாகாணம் துல்சா நகரிலுள்ள வைத்தியசாலையொன்றில் நேற்றுமுன்தினம் மாலை மர்ம நபர் ஒருவர் திடீரென நுழைந்தார். சிறிதுநேரம் 2ஆம் தளத்தை நோட்டமிட்ட அவர், 2 துப்பாக்கிகளை எடுத்து கண்மூடித்தனமாக சுட்டார். இதில் 4 பேர் நிகழ்வு இடத்திலேயே உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் குறித்து தகவலறிந்து சில நிமிடங்களில் விரைந்துவந்த பொலிஸார் அவரை பிடிக்க முயன்றனர்.

ஆனால், அதற்குள் மர்ம நபர் தன்னைத்தானே சுட்டுக் கொன்று உயிரிழந்துவிட்டார். தாக்குதல் நடத்திய மர்ம நபர், சுமார் 40 வயதுடைய கறுப்பினத்தவர் என்று தெரிவித்துள்ள பொலிஸார், அவரது அடையாளங்களை வைத்து விசாரித்து வருவதாக தெரிவித்துள்ளனர். நிகழ்விடத்திலிருந்து கைத்துப்பாக்கி ஒன்றையும் ரிவால்வர் ஒன்றையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் டெக்சாஸ் ஆரம்பப் பாடசாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 19 மாணவர்கள் உட்பட 22 பேர் கொல்லப்பட்டனர்.

அண்மைக்காலமாக அமெரிக்காவில் அதிகரித்துவரும் துப்பாக்கிச்சூடு சம்பவங்களை தடுக்க கடும் சட்டங்களை இயற்ற வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வரும் நிலையில், தற்போது ஒக்லஹோமா மாகாணத்தில் இந்த துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

## மோசமாகி வருகிறது வடகொரியா நிலைமை



கொரோனா பரவலால் வடகொரியாவின் நிலைமை மோசமாகி வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து உலக சுகாதார அமைப்பின் அவசரநிலைக்கான இயக்குநர் மைக் ரையன் தெரிவிக்கையில்,

வடகொரியாவில் நிலவும் உண்மையான நிலையை கண்டறிவதில் சிக்கல்கள் நீடிப்பதாகவும் வடகொரிய அரசு முழுமையான தரவுகளை வழங்காததால் சீனா, தென்கொரியா போன்ற அண்டை நாடுகளின் மூலம் அந்நாட்டின் நிலையை கண்காணித்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் வடகொரிய மக்கள் கொரோனா தடுப்பூசி செலுத்தாதது குறித்து கவலை தெரிவித்த மைக் ரையன், உலக சுகாதார அமைப்பு பலமுறை தடுப்பூசி உள்ளிட்டவற்றை அந்நாட்டுக்கு வழங்க முன்வந்ததாக தெரிவித்தார்.

## நூறு நாட்களை எட்டிய உக்ரைன் - ரஷ்யப் போர்

ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் தொடங்கி இன்றுடன் நூறு நாட்களை எட்டியுள்ளது.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. ரஷ்யாவின் தொடர் தாக்குதல்களால் உக்ரைனின் பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளன.

போர் காரணமாக உக்ரைனிலிருந்து இதுவரை 68 இலட்சம் பேர் அகதிகளாக அண்டைநாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

**"ரஷ்யாவைத் தாக்கும் எண்ணமில்லை"**

இந்நிலையில், எல்லையைத் தாண்டி ரஷ்யாவுக்குள் தாக்குதல் நடத்தப்போவதில்லை என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி உறுதியளித்துள்ளார்.

இது குறித்து அமெரிக்க தொலைக்காட்சியொன்றுக்கு அவர் தெரிவிக்கையில்,



''ரஷ்யாவுக்குள் தாக்குதல் நடத்தும் எண்ணம் எங்களுக்கில்லை. ரஷ்யா, உக்ரைன் மண்ணில் தாக்குதல் நடத்துவதைபோல் நாங்கள் அந்த நாட்டில் தாக்குதல் நடத்தமாட்டோம். எங்களது தற்காப்புக்காகத்தான் போரிடுகிறோம்'' - என்றார்.

**அணு ஆயுதப் போர் ஒத்திகை**

மேலும், உக்ரைனுக்கு உதவு வகையில் பல்வேறு நாடுகள் போர் ஆயுதங்கள், உணவு, மருந்து என பல்வேறு உதவிகளை செய்து வருவதுடன், ரஷ்யா மீது பல்வேறு வகையான தடைகளையும் விதித்துள்ளன.

அந்தவகையில், உக்ரைனுக்கு அமெரிக்கா உயர்தொழில்நுட்ப ஆயுதங்களை அளிக்கவிருப்பதாகத் தெரிவித்துள்ளது. இந்தச் சூழலில், ரஷ்யாவின் இவானோவோ மாகாணத்தில் அந்நாட்டுப் படையினர் அணு ஆயுதப் போர் ஒத்திகையில் ஈடுபட்டதாக பாதுகாப்புத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

100 வாகனத் தளவாடங்கள், கண்டம் விட்டு கண்டம் பாயும் 'யார்ஸ்' ஏவுகணை ஏவிகளுடன் 1,000 வீரர்கள் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டதாக அமைச்சு தெரிவித்தது.

## சீனாவில் 6.1 ரிச்டர் அளவில் அடுத்தடுத்து இரு நிலநடுக்கங்கள்: 4 பேர் பலி; 15 பேர் காயம்

சீனாவில் 6.1 ரிச்டர் அளவில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரு நிலநடுக்கங்களால் 4 பேர் உயிரிழந்துள்ளதுடன், 15இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

சீனா சிஸ்வான் மாகாணத்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரு நிலநடுக்கங்களால் கட்டடங்கள் குலுங்கின. ரிச்டர் அளவில் 6.1 ஆக நில நடுக்கம் பதிவாகியுள்ளது.

கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்த 4 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையில், படுகாயமடைந்த 15இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டனர்.

அண்டை நகரங்களிலும் அதிர்வு உணரப்பட்டதால் மக்கள் வீடுகளை விட்டு வீதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். முன்னெச்சரிக்கை



நடவடிக்கையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரயில் சேவை நிறுத்தப்பட்டது.

## அவதூறு வழக்கு: ஜொனி டெப்புக்கு ஆதரவாக தீர்ப்பு; ஆம்பர் ஹேர்ட்டு இழப்பீடு வழங்க நடுவர்கள் உத்தரவு

அவதூறு வழக்கில் ஹொலிவுட் நடிகர் ஜொனி டெப்புக்கு (Johnny Depp) ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்க நடிகை ஆம்பர் ஹேர்ட் (Amber Heard) மீது காதல் வயப்பட்டு 2015இல் அவரை கரம்பிடித்த ஜொனி டெப், 15 மாதங்களில் விவாகரத்து பெற்றார்.



இதன்பின் 2018இல் வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் ஆம்பர் ஹேர்ட் எழுதிய கட்டுரையால் பல படங்கள் ஜொனி டெப்பின் கையை விட்டுச் சென்றன. இதனால் அவதூறாக 380 கோடி ரூபா நஷ்ட ஈடு கேட்டு ஜொனி டெப் ஆம்பர் மீது வழக்குத் தொடுத்தார்.

இந்த வழக்கில் ஜொனி டெப்புக்கு ஆதரவாக தீர்ப்பு கிடைத்துள்ளது. ஆம்பர் 10 மில்லியன் டொலரை இழப்பீட்டுத் தொகையாகவும், 5 மில்லியன் டொலரை தண்டனைக்குரிய இழப்பீட்டுத் தொகையாகவும் வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டது.

இந்தத் தீர்ப்பை ஜொனி டெப் ரசிகர்கள், "உண்மை வென்றது" என கொண்டாடி வருகின்றனர்.

"நட்ட ஈடு வழக்கில் ஜொனி டெப் தோற்பதற்கே அதிக வாய்ப்பிருப்பதாக கூறப்பட்டது. ஆனால், சட்டத்தின் மூலமாக அவர் வெற்றிபெற்றுள்ளார்" என ரசிகரொருவர் தெரிவித்துள்ளார்.

"அவர் இனிமேல் மகிழ்சியாக வாழ வேண்டும். அவருக்கு இந்த வெற்றி 100% பொருத்தமானது. ஜொனியின் குழுவை பாராட்டுகிறேன். இது மகத்தான வெற்றி" என ஒருவர் ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்தத் தீர்ப்புக்கு நடிகை ஆம்பர் ஹெர்ட் மற்றும் அவரது ஆதரவாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளார்.

## மெக்சிக்கோவை தாக்கிய 'அஹதா': 11 பேர் பலி - 33 பேர் மாயம்



மெக்சிக்கோவில் சூறாவளி காற்றுடன் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட பெருவெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளதுடன், 33 பேர் காணாமல்போயுள்ளனர்.

மெக்சிக்கோவின் தெற்கு பகுதியிலுள்ள அஹ்சகா மாகாணத்தை சக்திவாய்ந்த 'அஹதா' என பெயர்சூட்டப்பட்ட சூறாவளி தாக்கியுள்ளது. மணிக்கு 169 கி.மீ. வேகத்தில் வீசிய சூறாவளிக் காற்றில் ஏராளமான மரங்கள் முறிந்து விழுந்து குடியிருப்புகள் சேதமடைந்தன. கடுமையான சூறாவளிக் காற்றுடன் பெய்த கடும் மழையால், பல்வேறு மாகாணங்களில் ஆறுகள் கரைபுரண்டுள்ளன.

நிலச்சரிவில் சிக்கி இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ள நிலையில், காணாமல்போன 33 பேரை தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

## தீக்குளித்தவரின் அருகே நின்று 'செல்பி' எடுக்க முயற்சி



துருக்கியில் தீக்குளித்து தற்கொலைக்கு முயன்ற நபர் அருகே நின்று சிலர் செல்பி எடுக்க முயன்றுள்ளனர்.

இஸ்தான்புல் நகரிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கலாட்டா கோபுரத்தின் எதிரே நீண்டநேரமாக ஒருவர் அரிவாள் மற்றும் பெற்றோல் கேனுடன் சுற்றித் திரிந்துள்ளார். விரக்தியுடன் அலைந்த அந்த நபர் திடீரென தீக்குளித்துள்ளார்.

அப்போது சிலர் அவர் அருகே நின்று செல்பி எடுக்க முயன்றனர். தீ அணைப்பான்கள் மூலம் நெருப்பு அணைக்கப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் குறித்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# டேரன் சமிக்கு பாகிஸ்தானின் உயரிய விருது



பாகிஸ்தானுக்கு சர்வதேச கிரிக்கெட்டை மீண்டும் கொண்டு வந்ததற்காக பாகிஸ்தானின் 3ஆவது உயரிய சிவிலியன் விருதான சிதரா பாகிஸ்தான் விருதை மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் டேரன் சமி கடந்த திங்களன்று பெற்றார். இதன் புகைப்படங்களை தனது ட்விட்டர் பக்கத்திலும் அவர் பதிவிட்டுள்ளார்.

பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் ஆடிய ஒருசில சொற்ப வெளிநாட்டு வீரர்களில் டேரன் சமியும் ஒருவர். 2009இல் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது பயங்கரவாதத் தாக்குதல் நடந்த பிறகு பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக பாகிஸ்தானுக்கு எந்த அணியும் பயணிக்கவில்லை.

இப்போதுதான் ஒருசில நாடுகள் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றன. இருமுறை இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்தை வென்ற மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவரான டேரன் சமி, 2016 முதல் 2020 வரை பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் பெஷாவர் ஷால்மி அணிக்கு ஆடினார்.

# கட்டார் தேசிய கிரிக்கெட் அணியின் தலைவராக இலங்கையர்




கட்டார் கிரிக்கெட் அணியின் தலைவராக இலங்கையை பிறப்பிடமாகக்கொண்ட ரிஸ்லான் இக்பார் நியமிக்கப்பட்டுள்ளார்.

கண்டி மாவட்டத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட ரிஸ்லான் இக்பார், கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியின் முன்னாள் மாணவராவார்.

தற்போது 36 வயதாகும் ரிஸ்லான் இக்பார், 2000இன் ஆரம்ப காலங்களில் கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியின் சிரேஷ்ட கிரிக்கெட் அணியை வழிநடத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கண்டி கிரிக்கெட் கழகத்தின் முன்னாள் வீரராகவும் காணப்படுகின்ற ரிஸ்லான் இக்பார், இலங்கை 19 வயது கிரிக்கெட் அணிக்காக தெரிவாகியிருந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. விக்கெட்காப்பு துடுப்பாட்ட வீரரான ரிஸ்லான் இக்பார் 2010ஆம் ஆண்டிலிருந்து கட்டாரின் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட ஆரம்பித்திருந்ததோடு, பின்னர் 2019ஆம் ஆண்டு சவூதி அரேபிய அணிக்கு எதிரான இருபதுக்கு 20 போட்டி மூலம் கட்டார் அணிக்காக சர்வதேச அறிமுகம் பெற்றிருந்தார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# இளம் வீரர் மீது கொடூரத் தாக்குதல் !



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியைச் சேர்ந்த 20 வயது இளம் கிரிக்கெட் வீரர் மாண்ட்லி குமாலோ. இவர் கடந்த 2020ஆம் ஆண்டு நடந்த இளையோர் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் தென்னாபிரிக்க அணியில் விளையாடியவர்.

இவர் சமீபத்தில் முடிந்த போட்டியில் வெற்றிபெற்றதற்காக கடந்த சனிக்கிழமை இரவு இங்கிலாந்திலுள்ள பிரிட்ஜ்வாட்டர் பகுதியில் வெற்றி கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளார். அப்போது இரு தரப்பினருக்குமிடையே பிரச்சினை எழுந்துள்ளது. இதில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர், மாண்ட்லியை மிகக் கடுமையாக தாக்கியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த மாண்ட்லி மயக்கமடைந்து விழுந்தார். இதையடுத்து அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டு, கோமாவுக்கு சென்றதாக தெரியவந்துள்ளது. இதையடுத்து அவர் விரைவில் குணமடைய கிரிக்கெட் ரசிகர்கள் பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

# இரு நாடுகளுக்கிடையில் T20 போட்டி தேவையில்லை

## உலகக்கிண்ண போட்டியில் விளையாடினால் போதும் – ரவி சாஸ்திரி

இரு நாட்டு அணிகளுக்கிடையில் நடைபெறும் இருதரப்பு கிரிக்கெட் தொடரில் இருபதுக்கு 20 தொடர் நடத்த தேவையில்லை - என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைமைப் பயிற்றுவிப்பாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், இரு நாட்டு தொடரில் 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகள் அதிகமாக நடத்தப்படுகின்றன. என்னைப் பொறுத்தவரை 20 ஓவர் கிரிக்கெட், உதைபந்து போட்டி போன்று இருக்க வேண்டும். அதாவது 20 ஓவர் வடிவிலான கிரிக்கெட் அதற்குரிய உலகக்கிண்ணப் போட்டியில் மட்டுமே இருக்க வேண்டும். இரு நாட்டு அணிகள் இடையிலான 20 ஓவர் தொடர் தேவையில்லை. அதை மக்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்வதில்லை.

நான் இந்திய அணிக்கு 6-7 ஆண்டுகள் பயிற்சியாளராக இருந்துள்ளேன். அந்த காலகட்டத்தில் இந்திய அணி விளையாடிய 20 ஓவர் போட்டிகளில் உலகக்கிண்ணம் தவிர்த்து மற்ற எதுவும் நினைவில் இல்லை. ஒரு அணி உலகக்கிண்ணம் வென்றால் அது எப்போதும் நினைவில் இருக்கும். துரதிர்ஷ்டவசமாக எனது பயிற்சிக் காலத்தில் அது நடக்கவில்லை. உலகம் முழுவதும் 20 ஓவர் வடிவிலான லீக் போட்டிகள் தற்போது நடக்கின்றன.

ஒவ்வொரு நாட்டு கிரிக்கெட் சபையும் தங்கள் நாட்டில் நடக்கும் 20 ஓவர் லீக்கில் விளையாட வீரர்களுக்கு அனுமதி அளிக்கின்றன. அது அவர்களது உள்ளூர்ப் போட்டியாகவும் இருக்கிறது.

இப்படிப்பட்ட சூழலில் சர்வதேச 20 ஓவர் கிரிக்கெட்டை எடுத்துக்கொண்டால், 2 ஆண்டுக்கு ஒரு முறை 20 ஓவர் உலகக்கிண்ணப் போட்டியில் விளையாடினால் போதும். பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள ஐ.பி.எல். போட்டியை ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை நடத்தலாம்.

அதற்கான காலம் வெகுதொலைவில் இல்லை என்று முன்னாள் வீரர் ஆகாஷ் சோப்ராவின் கருத்தில் எனக்கு உடன்பாடு உண்டு. எதிர்காலத்தில் அப்படி நடக்க வாய்ப்புள்ளது. என தெரிவித்தார்.



# வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக மீண்டும் விக்டோரியா லக்ஷ்மி



இலங்கை வலைபந்தாட்ட சங்கத்துக்கான எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கு புதிய நிர்வாகிகளைத் தெரிவுசெய்யும் தேர்தல், விளையாட்டுத்துறை அமைச்சின் டன்கன் வைட் கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

32 அங்கத்துவ சங்கங்களின் பங்குபற்றலுடன் நடைபெற்ற இத்தேர்தலில் தேசிய சேவைகள் வலைபந்தாட்ட சங்கம் சார்பாக தலைவர் பதவிக்கு போட்டியிட்ட விக்டோரியா லக்ஷ்மி 21 வாக்குகளை பெற்றுக்கொள்ள, அவரை எதிர்த்து மேல் மாகாண வலைபந்தாட்ட சங்கம் சார்பாக போட்டியிட்ட க்லெரில் டோசருக்கு 11 வாக்குகளும் கிடைத்தன.

இதன்படி, வலைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் ஆசிய வலைபந்தாட்ட சங்கத்தின் உதவித் தலைவருமான லக்ஷ்மி விக்டோரியா 10 மேலதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று மீண்டும் இலங்கை வலைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக தெரிவாகினார். இதற்கு முன் இரண்டு தடவைகள் இவர் இலங்கை வலைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வலைப்பந்தாட்ட சங்கத்தின் புதிய நிர்வாகிகள்:

தலைவர் – விக்டோரியா லக்ஷ்மி
செயலாளர் – விந்தனா தயாரட்ன
பொருளாளர் – பத்மினி ஹொரணகே
உதவிச் செயலாளர் – நிதர்சனா குலேந்திரன்
உதவிப் பொருளாளர் – லயானி ரேணுகா

# நுவரெலியா உதைபந்தாட்ட லீக்கின் போட்டிகள் ஆரம்பம்








(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா உதைபந்தாட்ட லீக்கின் புதிய நிர்வாக சபையின் ஏற்பாட்டில் உதைபந்தாட்டப் போட்டிகள் கடந்த வாரம் நுவரெலியா மாநகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது.

30 வருடங்களுக்குப் பின்னர் நுவரெலியா உதைபந்தாட்ட சங்கத்தின் புதிய இளைய நிர்வாகத்தின் கீழ் இவ்வருடத்தின் முதல் ஏ பிரிவுக்கான முதல் போட்டி நுவரெலியா மாநகர சபை மைதானத்தில் சர்வதேச பாடசாலை மாணவர்களின் பேண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் உத்தியோகபூர்வமாக ஆரம்பமானது.

நுவரெலியா லீக்கின் புதிய தலைவரும், நுவரெலியா மாநகர சபை உறுப்பினருமான இராமையா கேதீஸ் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில் நுவரெலியா மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரட்ன பிரதம அதிதியாகவும், நுவரெலியா மாநகர சபை உறுப்பினர்கள் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன் ஆரம்பப் போட்டியில் நுவரெலியா யங் பேட்ஸ் மற்றும் யங் யுனைடெட் ஆகிய அணிகள் மோதிக் கொண்டன. இப்போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் யங் பேட்ஸ் அணி வெற்றிபெற்றது. இதனைத் தொடர்ந்து இவ்வருடத்தின் ஏ, பி, சி பிரிவுகளுக்கான அனைத்துப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

# இலங்கை அணியுடன் மீண்டும் இணையும் மாலிங்க

சுற்றுலா அவுஸ்திரேலிய அணியுடனான ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தொடருக்கான இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சு ஆலோசகராக லசித் மாலிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.



இலங்கை கிரிக்கெட்டின் வேண்டுகோளுக்கு இணங்க வேகப்பந்துவீச்சு ஆலோசகராக பணியாற்ற லசித் மாலிங்க ஒப்புக்கொண்டுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு, 3 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர், 5 போட்டிகள்கொண்ட ஒருநாள் மற்றும் 2 போட்டிகள்கொண்ட டெஸ்ட் ஆகிய தொடர்களில் விளையாடவுள்ளது.

இந்தத் தொடர் எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகிறது. அந்தவகையில் முதலில் நடைபெறவுள்ள இருபதுக்கு 20 தொடருக்கான அவுஸ்திரேலியா இருபதுக்கு 20 அணி நேற்று முன்தினம் இலங்கை வந்தடைந்தது.

இந்நிலையிலேயே குறித்த தொடருக்கான இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சு ஆலோசகராக லசித் மாலிங்க நியமிக்கப்பட்டுள்ளார். ஜூன் 24ஆம் திகதிவரை மாலிங்க இலங்கை அணியுடன் இருப்பார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இவ்வருடம் ஆசியில் நடைபெறவுள்ள இருபதுக்கு 20 உலகக்கிண்ணத்திற்கான இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சு ஆலோசகராகவும் லசித் மாலிங்கவை நியமிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் ஆஸியில் நடைபெற்ற இருபதுக்கு 20 சுற்றுப்பயணத்தின்போது இலங்கை அணியின் பந்துவீச்சு ஆலோசகராகவும் மாலிங்க பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7